[illegible] 1923-24

[illegible] 14 [illegible] 4

JL
R63-7724, N11VD ·
N24:14.4
186735

958

Regd: No. M. 916.

# THE VEDANTA DIPIKA

# வேதாந்த தீபிகை.

ருதிரோத்காரிஸூ,

1923—1924.

ஸம்புடம் 14.

ஸஞ்சிகை 4.

தைமீ.

JANUARY.



பத்ராதிபர்.

கடாதூர்
ஸ்ரீநிவாஸாசார்யர்,
பி.ஏ., பி.எல்.

கார்யதர்சி.

ஆர். ஸ்ரீநிவாஸராகவ
அய்யங்கார், எம்.ஏ.

## விஷய ஸூசிகை.


| | |
|---|---|
| 1. பத்ராதிபரின் குறிப்புக்கள் | 105 |
| 2. ஸ்ரீராமாயண தத்வார்த்தம்.—காடந்தேத்தி. கோபாலாசார்யர். | 114 |
| 3. துளஸீ.—நெடுந்தெரு. ஸ்ரீநிவாஸாசார்யர். | 118 |
| 4. ஸபையின் அங்கத்தினர்களின் பதின்மூன்றாவது வார்ஷிக மஹாஸங்கம் | 121 |
| 5. இம்மையும் மறுமையும்.—ஸ்ரீசைல தாதாசார்யர். | 124 |
| 6. ஓர் விஜ்ஞாபனம்.—ஆர். ஸ்ரீநிவாஸராகவன். | 125 |
| 7. ஸ்ரீபாகவததனிச்லோகீ-பண்டிதபூஷணம் சே. நரஸிம்மாசார்யர். | 129 |
| 8. நீதிஸ்லோகங்கள்.—நெடுந்தெரு. ஸ்ரீநிவாஸாசார். | 132 |
| 9. உபயவேதாந்தம்.—காரப்பங்காடு. சிங்கப்பெருமாள் ஸ்வாமி | 135 |
| 10. ஸச்சரித்ர ரக்ஷை, தமிழ்மொழிபெயர்ப்புடன்.—பண்டிதபூஷணம் சே. நரஸிம்மாசார்யர். | 17 |


K. R. Press, Madras.

வர்ஷச்சந்தா ரூ. 3—0—0.] [ஸஞ்சிகை 1-ச்கு அணா 4.



ஜெர்மன்

# டிக்-டாக் கடியாரம்


புதியதாகவும், நூதனமாகவும், ஜெர்மன் தேசத்தில் இருந்து வரவழைக்கப்பட்டது. சரியான காலம் காட்டக் கூடியது. மிக்க அழகாயும், மிக்க நேர்த்தியாயும் தயார் செய்யப்பட்டது.

**விலை ரூ. 3 தான்.**

இன்றே ஒன்று வரவழைத்துப் பாருங்கள்.

# இது வேண்டுமா?

உயர்ந்த கையில் கட்டும் கடியாரம் தோலுடன் அனுப்பப்படும்.



லீவர் மூவ்மெண்டு நெடுநாள் உழைக்கக்கூடுமான அழகுள்ள கை கடியாரம். செலவு அநேகம் ஆய்விட்டது.

கையில் கட்டுவதற்கு மிக்க அழகாயுள்ளது. விலை தோலுடன் ரூ. 7—8—0

விலாசம்:—வி. எஸ். வாச் கம்பெனி., தபால்பெட்டி 105, மதராஸ்.


---

## கோயில் தென்னாசார்ய ஸம்ப்ரதாய ஸம்ரக்ஷண ஸபா, ஸ்ரீரங்கம்.

1923௵ டிசம்பர்௴ 20உ ஸபையின் எட்டாவது வார்ஷிக மஹாஸங்கம் ஸ்ரீஉடையவர் ஸந்நிதியில் கூடிற்று. ராவ்பஹதூர் ஸ்ரீமான் வேலூர் ரங்கநாதம் செட்டிகாரு அக்ராஸனம் வஹித்தார். சென்ற ஒருவருஷத்தில் ஸபையால் செய்யப்பட்ட வேலையை எடுத்துக்காட்டுகிற அறிக்கையை கார்யதர்சி ஸ்ரீ. உ. வே. கஸ்தூரி ரங்காசார்யர் வாசித்தார். சென்னையிலுள்ள வைச்ய பிரபுக்களுடைய தர்மத்தால் நடத்தப்பட்டுவரும் கோயில் வேதாந்த த்வயவர்த்தினீ பாடசாலையின் மாணாக்கருக்குள் முதன்மையானவர்களுக்குப் புஸ்தகங்கள் பாரிதோஷிகமாய்க் கொடுக்கப்பட்டன. ஒவ்வொரு மாணாக்கருக்கும் ஒரு ஜோடி கதர் சால்வை இனாமாகக் கொடுக்கப்பட்டது. பரமஹம்ஸ பரிவ்ராஜகேத்யாதிமாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவானமாமலை கோவில் யதீந்த்ரப்ரவணஜீயர் ஸ்வாமி பகவந்நாம வைபவத்தைப்பற்றி இனிமையான உபந்யாஸம் செய்தார். அது முடிந்ததும் ஸபாபண்டிதர்களுக்கும் உபந்யாஸகருக்கும் ஸம்மானம் செய்தவுடன் ஸபை கலைந்தது.

கார்யதர்சி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:


# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:— கடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர், பி. ஏ., பி. எல்.

கார்யதர்சி:— ஆர். ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர், எம். ஏ.

ஸம்புடம் 14.] ருதிரோத்காரி௵, தைமீ. [ஸஞ்சிகை 4.


“த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா” ॥

ஸ்ரீபாகவதம். 1-9-23.

## பத்ராதிபரின் குறிப்புக்கள்.

### நமது ஸபையின் பதின்மூன்றுவது வார்ஷிக மஹாஸங்கத்தின் வ்ருத்தாந்தங்கள்.

‘பரீக்ஷாஞ்ச ஜநஸ்யாஸ்ய கரோத்யத்ருடசேதஸாம்’ (மனதில் உறுதியில்லாதவர்களைப்பற்ற ஸர்வரக்ஷகனன ஸர்வேச்வரன் அவ்வோஸமயங்களில் பரீக்ஷையும் செய்கிறுன்) என்றபடியே, நமது ஸபையின் இவ்வார்ஷிக மஹாஸங்கத்தில் பகவானுடைய சோதனை கொஞ்சம் ஏற்பட்டது. நமது ஸபையைச் சேர்ந்தவர்களுக்கும் ஸபாப்ரவர்த்தகர்களுக்கும் அதன் ப்ரவ்ருத்திகளில் விச்வாஸம் த்ருடமாயிருக்கிறதா என்பதைச் சிறிது பகவான் பரீக்ஷித்துவிட்டார். இம்மாதிரியான மஹாஸங்கத்தைத் திவ்ய தேசங்கள்தோறும் இங்கே, இங்கே என்று மேல்விழுந்து அழைக்கவேண்டியது உசிதமாயிருக்க, அங்ஙனன்றியே ஸபையின் ப்ரவர்த்தகர்கள் (Executive Committee) தாமே, ஸத்காரஸபை யென்ெருரு ஆதரவுமில்லாமலே சென்னையிலேயே மீண்டும் இவ்வர்ஷமும் மஹாஸங்கத்தைச் சிறிது அவகாசத்துக்



186735

குள் கூட்டி நடத்திவைக்கவேண்டி வந்ததே இதற்கு ருஜுவாய்விட்டது! பன்னிரண்டாவது மஹாஸங்கம் அத்யந்த கோலாஹலத்துடன் நடந்தேறியதும், அதற்குப்பல ஸ்ரீமான்கள் தாராளமாக த்ரவ்யஸஹாயம் செய்ததும், வைதிக வித்வான்களுக்கு வெகு விமர்சையாக ஸம்மானங்களைக் கொடுத்ததும் ஸ்ரீவைஷ்ணவர்களின் நினைவில் ப்ரதிபலித்துக்கொண்டே யிருந்ததாகிலும் இவ்வர்ஷத்தில் ‘யாசகஸ்ய திஶ: ஶூந்யா:’ (யாசகனுக்குத் திரும்பின திக்கெல்லாம் சூன்யமாகின்றன) என்கிற கணக்கில், ஸபாப்ரவர்த்தகர்களுக்கு எங்கும் ப்ரோத்ஸாஹநம் கிடைக்கவில்லை. இதற்கு ஸம்பாவிதங்களான காரணங்களை ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார் மஹாஸங்கத்துக்கு ஸ்வாகத நிவேதனம் (Welcome address) செய்ததில் ஒருவாறு ஸங்க்ரஹித்தார். வாணிஜ்யம் முதலிய வ்ருத்திகளிலிருப்பவர்களுக்குப் பலவிதங்களில் ஸௌகர்யக்குறைவுகளுண்டாய்விட்டன. உத்யோகாதிகளில் உயர்ந்தபதவிகளை வஹிப்பவர்களுக்கும் மற்றவர்களுக்கும் மதஸம்பந்தமான விஷயங்களில் இன்னமும் அபிமானம் பெருகக்காணோம்.

‘ஸத்வாநுரூபா ஸர்வஸ்ய ஶ்ரத்தா பவதி பாரத।

ஶ்ரத்தாமயோऽயம் புருஷ: யோ யச்ச்ரத்த: ஸ ஏவ ஸ: ॥’

(ஸத்வ ரஜஸ் தமோ குணங்களோடு கூடிய மனதின் இசைவுக்கிணங்க எல்லோருக்கும் ச்ரத்தை உண்டாகிறது. மனிதன் எதைக்குறிப்பாய் அபிமானிக்கிறானோ அதனாலேயே அவன் ஆனவன் என்றுவிடலாம். அதாவது ஒருவன் எந்த விஷயத்தில் ச்ரத்தையுடன் ஈடுபடுகிறானோ அதைக்குறித்தே அவன் ப்ரவ்ருத்திகளுமிருக்கும்; அவற்றின் பலத்தையே அனுபவிப்பதும் நிச்சயம்) என்று ஸ்ரீகீதாசார்யன் அருளிச்செய்தபடியே நமது ஸமூஹ அபிவ்ருத்தியிலும், மதஸம்ரக்ஷணத்திலும் நம்மவருக்கு ச்ரத்தை வளர்ந்தாலல்லது இம்மஹாஸங்கம் போன்ற பொதுக்கார்யங்கள் த்ருப்திகரமாக நிறைவேறமுடியா. இவ்வர்ஷத்தில் தாம் போதுமான அளவில் ப்ரயாஸப்படமுடியாமற் போனதைப்பற்றி ஸ்ரீமான் அய்யங்கார் வருந்தினாரே யாகிலும், அவருடைய உதவியை முன்னிட்டே இம்மஹாஸங்கம் இவ்வளவேனும் நிறம் பெற்றது. எந்தப்பெரியகார்யமும் இரண்டொருவர் அதற்கென்றே தம்மை அர்ப்பணம் செய்தாலல்லது பலமுடைத்தாகாவென்று அவர் மொழிந்ததும் வாஸ்தவமே. ஆனால் மற்றவிஷயங்களைப்போல் மதமென்பது கண்காணப் பலங்கொடுப்பதல்லவாகையால், அதற்காகத்தம்மை த்யாகம் செய்பவர்களுக்கு வேறு சில ஆதரவுகளும் வேண்டியிருக்கின்றன. விரோதமாய்த் தடங்கல் ஏற்படாமலிருப்பதே முக்கிய உபகாரம். கட்டோடு ஒழிக்கவேண்டுமென்று இவ்வளவு காலமாய் நமது ஸபை பாடுபட்டுவருவதும், ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்துக்கு...ள் வ்யாதியுமாகிய வைமனஸ்யத்தை ஸ்வார்த்தபரர்



களான சிலர் கிளப்பிவிடப் பார்த்தார்கள். ஆயினும், ‘பயக்ருத் பயநாஶந:’ (பயத்தை உண்டுபண்ணுகிறவனும் பயத்தைப்போக்குகிறவனும் அவனே) ஆன, ச்ரிய:பதியின் கருணையினால் இம்மஹாஸங்கமானது நாம் எதிர்பாராத அளவிலும் சிறப்பாய் நடந்தேறிற்று. இவ்விடத்தில் பாகவத ப்ரவணரான ஸ்ரீமான் உப்பட்டூர் ஆழ்வார் செட்டியார் அவர்கள் இந்த வருஷத்திலும், விசாலமாயும் ரம்யமாயும் அமைக்கப்பட்ட தமதுராமாநுஜகூடத்தைக் கொடுத்தும், த்ரவ்யஸஹாயம் செய்தும், ஆவச்யமான அளவில் ததீயாராதனம் நடத்தியும், ப்ரீதியுடன் உபகரித்து இக்கைங்கர்யத்தை நிறைவேற்ற உதவியதை மிகவும் குதூஹலத்துடனும் க்ருதஜ்ஞையுடனும் குறிப்பிடுகின்றோம்.

## முதல் நாள் நடவடிக்கைகள்.

மார்கழிமீ 9உ (24—12—23) திங்கட்கிழமை யன்று காலை 11-30-மணிக்கு, க்ரமமாய் மஹாஸங்கம் ஆரம்பிக்கப்பட்டது. ஸ்ரீ வைஷ்ணவ வைதிகர்களும் லௌகிகர்களும், வித்வான்களும் இதரர்களுமான மஹாஜநங்கள் வெகு உத்ஸாஹத்துடன் மூன்று நாளும் கூட்டங் கூட்டமாக வந்திருந்தார்கள். இவ்வித ஸங்கங்களால் பயனுண்டோவென்று அதிசங்கை செய்தவர்களுக்கு இத்திரளே போதுமான ஸமாதானமாயிற்று. உபயகலையார்களும் இங்குக் காட்டிய பரஸ்பரபாவனை எங்கும் பரவினால் ஸ்ரீ வைஷ்ணவர் பெருமையும் ஸமூஹ பலமும் ஆச்சரியமாகப் பெருகத் தட்டில்லை. இதுவே நமது ஸபையின் பதின்மூன்று வர்ஷங்களின் உழைப்புக்குத் தகுந்த ப்ரயோஜநம்.

ஸ்வாகத நிவேதனம் முடிந்த உடனே கனத்த கரகோஷங்களுக்கிடையே ஸ்ரீமான் உ. வே. எம். ஓ. பார்த்தஸாரதி அய்யங்கார் ஸ்வாமி எம். ஏ., எம். எல்., அக்ராஸநத்தில் எழுந்தருளி உபந்யஸித்தருளினர். அவர் மொழிந்ததெல்லாம் ஸ்ரீ வைஷ்ணவ தர்மங்களை உள்ளங்கை நெல்லிக்கனி போல் ப்ரகாசப்படுத்தின. பூர்வ பீடிகையாகச் செய்த கைச்யாநுஸந்தானத்தில் ஸ்ரீ வைஷ்ணவருக்கு ஸ்வரூப ப்ராப்தமான பகவத்சேஷத்வத்தையும் பாரதந்திரியத்தையும், இளையபெருமாளுடையவும் பரதாழ்வானுடையவும் வ்ருத்தாந்தங்களை உதாஹரித்து விளக்கினர். ஸ்ரீ வைஷ்ணவர்கள் பரஸ்பரம் க்ரய விக்ரயங்களுக்கு அர்ஹராகும் ப்ரகாரத்தில் பாகவத சேஷத்வ புத்தியைப் பண்ணவேண்டிய ஆவச்யகதையையும், ஸம்ப்ரதாய ஸம்ரக்ஷணத்திலும் ப்ரவசநத்திலும் ஏகோபித்து அந்வயிக்க வேண்டியதைப் பற்றியும், ப்ரபந்நனென்னும் தசையை அடைந்தவனுக்கு ஜாதிநிற்கிறதா இல்லையா என்பதைப்பற்றி அபிப்ராய பேதமிருந்தாலும், அதனால் வர்ணாச்ரமதர்மங்களை விடமுடியாதென்பதையும், உடையவர் பிள்ளை உறங்காவில்லிதாஸர் கையைப்பிடித்துச் சென்றாராகிலும், பிள்ளை, உடையவர் திருக்கரங்களைப்

பற்றத் துணியவில்லை என்னும் ஐதிஹ்யத்தினல் ப்ரபந்நனுபிருக்கை கர்வத்துக்குக் காரணமாகக் கூடாதென்பதையும், இன்னம் மற்ற விஷயங்களேயும் அதிக விமர்சையுடன் எடுத்துரைத்தார்.

அநந்தரம் காலஞ்சென்ற திவான்பஹதூர் ஸ்ரீ. உ. வே. தி. த ரங்காசார்யருடையவும் ஸ்ரீமான் ஸர். கே. ஸ்ரீநிவாஸய்யங்காருடையவும் நிர்யாணங்களேப்பற்ற, ப்ரசுரிக்கப்பட்டிருந்த அநுதாபத்தீர்மானமானது, ஸ்ரீ. உ. வே. எஸ். கோபாலஸ்வாமி அய்யங்காரால் ப்ரேரணை செய்யப்பட்டு, ஸ்ரீமான்கள், எஸ். ராஜகோபாலாசார்யராலும், எம். எஸ். க்ருஷ்ணமாசார்யர் பி. ஏ. பி. எல் ஆலும், ஆமோதிக்கப்பட்டு ஸபையோரால் ஒருமனதாக மௌனத்துடன் நிறைவேற்றப்பட்டது.

பிறகு, ஸ்ரீ. உ. வே. காரப்பங்காடு சிங்கப்பெருமாள்ஸ்வாமி உபயவேதாந்தம் என்பதைப்பற்றி உபந்யஸிக்கத் தொடங்கி, அதன் சப்தார்த்தத்தை அநேகப்ரகாரங்களாக உபபாதித்து, ஸம்ஸ்க்ருதவேதாந்தத்துக்கும் த்ராவிட வேதாந்தத்துக்கும் உள்ள ருஷிஸாக்ஷாத்காரம், பரதத்வப்ரகாசம், அர்த்த பஞ்சக நிருபணம் முதலிய பொதுவான ஆகாரங்களை எடுத்துக்காட்டி அதிக ஸங்கோச விஸ்தரங்களில்லாதபடி உபந்யாஸத்தை நிகமனம் செய்தருளினர்.

ஸ்ரீமான் உ. வே. ஏ. வி. கோபாலாசார்யர்ஸ்வாமி எம். ஏ., பி. எல்., இதனடுத்த உபந்யாஸகர். இவர் ஸ்ரீதேசிகன் அருளிச்செய்த அதிகரணஸாராவளி என்னும் க்ரந்தத்தின் சில ச்லோகங்களை உதாஹரணமாக எடுத்து விளக்கி, அதன் கவிதாப்ரபாவத்தைப் பலபடிகளில் வித்வான்கள் மனதைக்கவரும்படி உபபாதித்தருளினர்.

இடைவேளைவிராம மானதும், 3 மணிக்கு மறுபடியும் ஸபைகூடிய போது, ஸ்ரீ. உ. வே. ஸ்ரீசைல தாதாசார்யர் ஸ்வாமி ஸ்ரீ கீதாஸங்க்ரஹத்தைப் பற்றி உபந்யஸித்ததில் கீதையின் அத்யாயஸங்க்யையும் பாரதபர்வங்கள் முதலியவைகளின் ஸங்க்யைகளும் 18 ஆக இருப்பதினல் இந்த எண்ணுக்கு ஏதோ மாஹாத்ம்யம் ஊஹிக்கலாமென்பதைக்காட்டி, இன்னம் பலவிசேஷங்களேயும் நிரூபித்தருளி நிகமத்தில் ஸ்ரீகீதையில் உரைக்கப்பட்ட அநேக தர்மங்களைத்தனித்தனியே எடுத்துரைத்தார்.

இவரையடுத்து ஸ்ரீ. உ. வே. எஸ். வேதாந்தாசார்யர்ஸ்வாமி எம். ஏ., எல். டி., ஸர்வேச்வர ஸௌலப்யத்தை ப்ரதிபாதிக்க ஆரம்பித்து, பகவானுடைய பரத்வத்துக்கு ஸௌலப்யம் ஆபரணமாயிருப்பதை விளக்கி, மத்ஸ்ய கூர்மாதி பகவதவதாரங்களில் ஸர்வேச்வரன் ப்ரகாசிப்பித்த ஸௌலப்ய ப்ரகாரங்களைத் தனித்தனியே நிரூபித்து, கண்ணன் நவநீத சௌர்யத்தில் 'உரவிடையாப்புண்டு' உரலோடு உரலாய் இருந்து ஏங்கிய ஸௌலப்யாதிசயத்தில்



ஈடுபட்டு ஆழ்வார் மோஹித்துக்கிடந்த வரலாற்றுடன் உபந்யாஸத்தை. நிகமித்தருளினர்.

ஸ்ரீ. உ. வே. ஸ்ரீசைல சக்ரவர்த்தி ஸ்வாமி பீ. ஏ., ச்ருதிப்ராமாண்யத்தைப்பற்றிச் செய்தது அன்றைய கடைசி உபந்யாஸம். 'இருள்தரு மாஞாலத்தில்' உழலுகின்ற நமக்குப் பகவத்ஸ்வரூபாதிகளை அறிய அநாதியாய் விச்சேதமின்றி வந்திருக்கும் வேதத்தைக்காட்டிலும் த்ருடமான ப்ரமாணம் வேறில்லை யென்பதை ப்ரமாண ஸம்ப்ரதாய உபபத்திகளைக் கொண்டு மிகத் தெளிவாய் உபந்யஸித்தார்.

## இரண்டாவது நாள், செவ்வாய்க்கிழமை 25—12—23,

காலை 11-30-மணிக்கு மீண்டும் மஹாஸங்கம் உபக்ரமிக்கப் பட்டது. இன்றைய நடவடிக்கைகளை ஆரம்பிக்குமுன் ஸ்ரீ வைஷ்ணவப்ரமுகரும், ஹிந்துபத்ரிகையின் ஆசிரியருமான ஸ்ரீமான் கஸ்தூரிரங்கய்யங்கார் பரமபதமடைந்ததைப்பற்றி மஹாஸங்கத்தின் அநுதாபத்தைத் தெரிவிக்க, அக்ராஸநாதிபதியால் ப்ரேரணை செய்யப்பட்டு ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்னர், நமது சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த சபையினுடையவும் அதன் அங்கபூதமான நமது தீபிகையினுடையவும் அபிவ்ருத்தியைப் பற்றிய தீர்மானம், முதல்கார்யமாக, மஸூலிப்பட்டணம் ராவ்சாஹிப் ஸ்ரீ உ. வே. ஸ்ரீநிவாஸராகவாசார்யரால் ப்ரேரணை செய்யப்பட்டது. இந்த ஸ்வாமி, நமது ஸபை ஸ்ரீ அஹோபிலமட சிஷ்ய ஸபையாக அங்குரித்ததுக்குக் காரணபூதர்களாயிருந்தவர்களில் ஒருவராகையால், இதன் வ்ருத்தாந்தத்தை ஆதிமுதல் எடுத்துச் சொல்லி, இப்போது இதில் ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹத்தைச் சேர்ந்தவர்களெல்லாம் அந்வயித்திருப்பதில் இதன் அபிவ்ருத்திக்கு வேண்டிய த்ரவ்யார்ஜஜந ப்ரகாரங்களையும் உதாஹரித்தருளினர். இவர் சொல்லியபடி ஒவ்வொரு ஸ்ரீ வைஷ்ணவரும் ஸமாச்ரயணம் செய்து கொள்ளும்போதும் விவாஹாதி ஸந்தர்ப்பங்களிலும் நமது ஸபைக்கென்று சிறிது ஸம்பாவனை செய்தாலும், பலதுளி பெருவெள்ள மென்கிற கணக்கில் வேண்டிய த்ரவ்யம் சேர்ந்து விடுவது நிச்சயம். அப்படியே ஸ்ரீ வைஷ்ணவர்கள் செய்யவேண்டுமென்று நாம் ப்ரார்த்திக்கின்றோம்.

இவரை யனுஸரித்து (இப்போது ராவ்ஸாஹிப்) ஸ்ரீ. உ. வே. டி. ராமாநுஜய்யங்கார் ஸ்வாமி பேசியதில், தீர்மானத்தைத் தாம் முழுமனதுடன் ஆதரிப்பதாகச் சொல்லி, தென்கலை ஸ்ரீ வைஷ்ணவர்கள் இன்னும் தாராளமாய் நமது ஸபையில் சேர்வதற்கு வேண்டிய ஸௌகர்யங்களை ஏற்படுத்த வேண்டுமென்றும், ஸபாப்ரவர்த்தகர்கள் ஸபையின் முன்னேற்றத்துக்காக ஆலஸ்யமின்றி உழைக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டார். இந்த வர்ஷத்துக்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட நிர்வாஹ ஸபையில் இந்த ஸ்வாமியும் இருப்

பதினல், இவருடைய முயற்சியினல் நமது ஸபைக்கு விசேஷ அநுகூலங்களுண்டாகுமென்றும், இவரபிப்ராயத்துக் கிணங்க நிர்வாஹ ஸபையில் தென்கலை அங்கத்தினர்களின் ஸங்க்யையும் அதிகமாக்கப்பட்டிருப்பதில், நமது ஸபையில் அக்கலையார் அதிசங்கையின்றித் தாராளமாய்த் திரண்டு வந்து சேர்ந்து ஸபையின் நோக்கங்களை நிறைவேற்றி வைப்பார்கள் என்றும் எதிர்பார்க்கின்றோம். தற்காலம் ஸபையில் ஏறக்குறைய 600-அங்கத்தினரிருந்த போதிலும் அக்கலையாரின் தொகை விரலால் எண்ணிவிடக்கூடியதாகத்தானிருக்கிறது.

இத்தீர்மானத்தை ஸ்ரீமான் எஸ். வெங்கடாசலம்பிள்ளையவர்கள் பி.எ.,பி.எல். தாங்கிப் பேசியதில் ராஜீயம்முதலிய விஷயங்களில் காணப்படும் ப்ராம்மணர்-ப்ராம்மணரல்லாதார் என்னும் இயக்கத்தை மதவிஷயத்தில் புகுர விடுவது உசிதமல்லவென்றும், அநாதியாக ப்ராம்மணரே ஆசார்யஸ்தாநங்களை வஹித்து வைதிகமான ஸ்ரீவைஷ்ணவ மதத்தை ப்ரவசனம் செய்வதிலும் பிறர் அவர்களை அநுஸரிப்பதிலும் ஒரு குறைவும் நேரிடவில்லையென்றும், ப்ராம்மணரல்லாதாரில் தகுந்த அதிகாரிகள் வரும்போது அவர்களைத் திருப்பாணாழ்வாரைப் பெருமைப்படுத்திய ப்ராம்மணர் நிச்சயமாய் ஆதரிப்பார்கள் என்றும், ஸ்ரீவைஷ்ணவர்களின் முன்னேற்றத்தையும் ஒற்றுமையையும் எவ்விதத்திலும் அபிவ்ருத்திசெய்யவேண்டியது நமது கடமை என்றும், தெளிவாயும் அமைதியுடனும் ப்ரஸங்கித்தார். ஸபையோர்களுக்கு இவர் உக்திகள் மிகவும் ஹ்ருதயங்கமமாக விருந்தது. தீர்மானம் கரகோஷத்துடன் ஒருமனதாய் அங்கீகரிக்கப்பட்டது.

இன்றைய முதல் உபந்யாஸம் கர்மயோகத்தைப்பற்றியது. ஸ்ரீபெரும்பூதூர் ஸ்ரீ. உ. வே. உழப்பாக்கம் ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி இதை விஸ்தரித்தருளினர். பரமபுருஷார்த்தத்துக்கு உபாயமாக சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட பக்தியோகத்துக்கு இது அங்கமாக விருக்கிறபடியையும், வர்ணாச்ரம தர்மாநுஷ்டானம் இவ்வதிகாரிக்கும் ப்ரபந்நனுக்கும் தவிர்க்கத்தக்கதல்லவென்பதையும், இதுவே கீதாசாஸ்த்ரத்தின் பரம உபதேசமென்பதையும் முக்கியமாய் உபபாதனம் செய்து உபந்யாஸத்தை உபஸம்ஹாரம் செய்தார்.

இவரையடுத்து உப்பிலியப்பன்கோவில் ஸ்ரீ. உ. வே. நவநீதம் க்ருஷ்ணமாசார்யர்ஸ்வாமி திருவேங்கடமுடையான் விஷயத்தில் ஆழ்வாரின் ஈடுபாடு,என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு, முதலில் ஆழ்வார் பெருமையையும் அவரிடத்தில் நமக்கு இருக்கவேண்டிய ஆழ்ந்த ப்ரேமையையும், அஃதில்லாவிடில் அவர்திவ்ய ஸூக்திகளின் அந்தரங்க தாத்பர்யங்களையறியமுடியாதென்பதையும் வற்புறுத்தித் திருவாய்மொழியில் திருவேங்கடமுடையான் விஷயமான பாசுரங்களிற் சிலவற்றை விளக்கி உபந்யஸித்தருளினர்.



ஸ்ரீ. உ. வே. தி. ஈ. சடகோபாசார்யர்ஸ்வாமி பி, ஏ. பி, எல். திருப்பாப்புலியூர்) அடுத்தாற்போல் ராமாநுஜ மதாபிவ்ருத்தியின் பொருட்டு லௌகிகர்களுக்கும் வைதிகர்களுக்கும் முறையே உள்ள பொறுப்பை விவரித்து, இதற்கு உபந்யாஸம், ப்ரவசநம், க்ரந்தகாலக்ஷேபம் என்னும் முறைகளைக்கையாட வேண்டியதையும் தெளியக் காட்டிக் கேட்போர் மனதைக் கவர்ந்தார்.

மத்தியகால விராமத்துக்கு அநந்தரம், முதலாக மைஸூர் மஹாவித்வான் பண்டிதரத்நம் ஸ்ரீ. உ. வே. லக்ஷ்மீபுரம் ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி ஸ்ரீவைஷ்ணவமதமும் ஸ்ரீபாஷ்யகாரரின் உபகாரமும் என்னும் விஷயத்தைப்பற்றி உபந்யஸித்தார். உபக்ரமத்தில் ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணங்களையும், ஸம்ப்ரதாயத்தையும் அதன் பரம்பரையையும் ப்ரகாசிப்பித்து விட்டு, ஸ்ரீபாஷ்யகாரர் செய்தருளின உபகாரங்களில் ப்ரதானமாக மூன்றை எடுத்து விஸ்தரித்தருளினர். அவற்றில் முதன்மையானது, அவர் லோகோஜ்ஜீவனார்த்தமாக ஸந்யாஸாச்ரமத்தை ஸ்வீகரித்தது. ஸந்யாஸத்தின் முதல்தர்மம் 'ஸர்வபூதங்களுக்கும் அநுகூலஞ்செய்யக்கடவேன்' என்னும் ஸங்கல்பம். இது சராசரங்களான பூதங்களெல்லாம் பகவானுக்கு சரீரங்களென்றும் அவனுடைய ஐச்வர்யங்களென்றும் தெளிவதினல் உண்டாகும் மனஉறுதி. இதுதான் எக்காலத்திலும் ஸந்யாஸ மென்பதற்கு மஹான்கள் கொண்டபொருள். இதை, ஸ்ரீபாகவதத்தில் ரந்தி தேவ உபாக்யாநத்தில், '[illegible] (நான் ப்ரும்ம ருத்ராதிகளுடைய பதவியையும் விரும்பவில்லை; அஷ்ட ஐச்வர்யங் கூடிய மீட்சியில்லாவாழ்ச்சி யென்னும் மோக்ஷத்தையும் அபேக்ஷிக்கவில்லை. எல்லா ஜந்துக்களும் துக்கமின்றி வாழும்பொருட்டு அவர்களுடைய சரீரங்களுள்ளிருந்து அவர்கள் அநுபவிக்கவேண்டிய துக்கங்களை நானே அடையக் கடவேன்; இதுவே நான் வேண்டுவது) என்னும் வசநத்தையும், '[illegible]' (கலியின் கொடுமையினல் விளையும் துன்பமெல்லாம் என்மேல் விழட்டும்; உலகம் முக்தியை அடையட்டும்) என்னும் புத்தவசனத்தையும், உதாஹரித்துக்காட்டி, ஸ்ரீபாஷ்யகாரர், தனக்கு அவச்யகரமான ஆசார்யன் கட்டளையை மீறுவதான தோஷத்துக்குட்பட்டும் உலகத்தார் துர்த்தசையை ஸஹிக்காதவராய் த்வயத்தை ப்ரகாசமாக உபதேசித்த வ்ருத்தாந்தத்தைக் குறிப்பிட்டார். ஸ்ரீபாஷ்யகாரர் பரிஜநங்களில் 74-ஸிம்மாஸநாதிபதிகளும் 700-ஸந்யாஸிகளும் 12000-ஸ்ரீவைஷ்ணவர்களும் எப்போதும் கூடியிருந்தார்கள் என்ற ஐதிஹ்யத்தினல், நமது ஸமூஹத்தின் ஸங்கீகரணம் (ஒன்று சேர்த்தல்) நமது அபிவ்ருத்திக்கு இன்றியமையாததென்பதை நிரூபித்தது அவர் செய்த மற்றொரு உபகாரம். இதை அநுஸரித்தே இம்மஹாஸங்கம் நடக்

கிறதென்றார். வேதம், உபநிஷத்து, ஸ்ம்ருதி, இதிஹாஸ புராணங்கள், பாஞ்சராத்ரம், ஆழ்வார்களின் திவ்யஸூக்திகள் இவையெல்லாம் ஒரேபொருளாயிருக்க, கால வைகுண்யத்தால் அவற்றில் பரமதஸ்தர்களால் கலக்கமுண்டானதைக் கணிசித்து, சாஸ்த்ரங்களின் ஒற்றுமையை நிலைநிறுத்தி வைதிக ஸம்ப்ரதாயத்தை ப்ரவர்த்தனம் செய்தது, ஸ்ரீபாஷ்யகாரரின் கீழ்ச்சொல்லிய உபகாரங்களில் மூன்றாவது. இது விஸ்தரமாக ப்ரதிபாதிக்கப்பட்டது. இந்த ஸ்வாமி உபந்யாஸத்தில் ஆதுநிகர்கள் கையாடும் விமர்ச முறையை இவர் அநுஸரித்து மதாந்தர க்ரந்தங்களைப் பரிசீலநம் செய்ததும் காணப்பட்டது.

பிறகு, திருமழிசை ஸ்ரீ. உ. வே. ராமாநுஜாசார்யஸ்வாமி ப்ரும்ம ஸூத்ரத்தில் பாஞ்சராத்ராதிகரணத்தை முன்னிட்டுப் பூர்வாசார்யர்கள் நிஷ்கர்ஷம் பண்ணியிருக்கும்ஸ்ரீபாஞ்சராத்ர சாஸ்த்ரத்தின் ப்ராமாண்யத்தைப்பற்றி ப்ரஸங்கித்தருளினர். கடைசியாக லக்ஷ்மீதத்வம்என்னும் விஷயம் ஸ்ரீ. உ. வே. காண்டேர்-ராமாநுஜாசார்யர் ஸ்வாமியால் வெகு ஸ்வாரஸ்யமாக உபந்யஸிக்கப்பட்டது. இவருடைய ப்ரஸங்கத்திறமையை எல்லோரும் மெச்சினார்கள்.

## மூன்றாவது நாள் புதன்கிழமை (26—12—23).

இன்றைத் தினம்முதல் அலுவல், சென்னை ஹிந்துதேவஸ்தான மசோதா கண்டனத்தைப்பற்றிய தீர்மானம். ஸ்ரீமான் ராவ்பஹதூர் வேலூர் ரங்கநாதம் செட்டியாரவர்கள் மஹாஸங்கத்துக்கு வரமுடியாததினால், இதை ஸ்ரீஅஹோபிலமடம் திவான் ஸ்ரீ. உ. வே. எஸ். டி. க்ருஷ்ணய்யங்கார் ஸ்வாமி ப்ரேரணை செய்து இப்பத்ராதிபர் ஆமோதிக்கத் தீர்மானம் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது. இதன் விஷயமெல்லாம் தீபிகாபிமானிகளுக்கு நன்றாய்த் தெரியும்.

அநந்தரம், ஸ்ரீரங்கம் ஸ்ரீ. உ. வே. மெய்யுவய்யங்காருடைய விஷ்ணு பாரம்யத்தைப்பற்றிய உபந்யாஸம் நடைபெற்றது. திருப்பதி மஹாமஹோபாத்யாயர் ஸ்ரீ. உ. வே. கபிஸ்தலம் தேசிகாசார்யர் ஸ்வாமி சில அஸௌகர்யங்களால் எழுந்தருளவில்லை. நமது சபையின் அப்யுதயத்துக்கு நெடுகிலும் ப்ரீதியுடன் உழைத்துவரும் ஸ்ரீ.உ.வே. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமிக்கு அஸஹ்யமான புத்ரசோகம் நேரிட்டுவிட்டபடியால் அவரும் இந்த ஸமயம் எழுந்தருளவில்லை. அவருக்கு நமது அந்தரங்கமான அநுசோசநத்தை இதனால் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இக்காரணங்களினால் அவர்களுடைய உபந்யாஸங்கள் நடைபெறவில்லை.

கடைசியாகத் திருவஹீந்திரபுரம் பண்டிதபூஷணம் பகவத் விஷயம் ஸ்ரீ. உ. வே. சேட்டலூர் நரஸிம்மாசார்யர் ஸ்வாமி, தமது உபஸம்ஹார உபந்யாஸத்தில் ஸ்ரீ பாஷ்யகாரர் நியமித்த ப்ரபந்நக்ருத்யங்களில் 'ஸ்ரீ பாஷ்யத்தை வாசித்து ப்ரவர்த்திப்பித்தல்' என்னும் கைங்கர்யத்தை ஸ்ரீ வைஷ்



ணவர்கள் சிரஸாவஹித்து நிறைவேற்றவேண்டிய பொறுப்பையும், மஹாப்ரயாஸத்துடன் வடதேசத்தில் ஸஞ்சாரம் செய்து போதாயன வ்ருத்தியைக் கண்டுபிடித்து அதற்கிணங்க ஸ்ரீ உடையவர் ஸ்ரீ பாஷ்யத்தை நிர்மாணம் செய்து நம்மை உஜ்ஜீவிப்பித்த மஹோபகாரத்தையும், ஆசார்ய கைங்கர்யம் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குப் பரமதர்ம மாகையால் பரமாசார்யரான ஸ்ரீ ராமாநுஜருடைய தாஸர்களாய் எல்லோரும் ஏகசிந்தையராய் பரஸ்பர ஸௌஹார்த்தத்துடன் அவருடைய நியமனத்தைத் தலைக்கட்டவேண்டிய ஆவச்யகதையையும், இதற்கு ஸ்வாசார்யாபிமானிகள் தடங்கலாகவேண்டியதில்லையென்பதையும், வற்புறுத்தி ஸபையின் உத்தரோத்தராபிவ்ருத்திக்கு மங்களாசாஸநம் செய்தருளினர். பிறகு விராமம்.

மறுபடியும் 3-மணிக்குச்சபைகூடிற்று. ஆரம்பத்தில் மைஸூர் மஹாவித்வான் பண்டிதரத்னம் ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி, மைஸூரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ ப்ரும்ம தந்த்ர பரகாலஸ்வாமியானவர் நமது ஸபைக்கும் மஹாஸங்கத்துக்கும் மங்களாசாஸநம் செய்து. அநுக்ரஹித்து இங்கு விஜ்ஞாபனம் செய்யும்படி தம்மை நியமித்ததை மிகவும் ஆஹ்லாதத்துடன் அறிவித்துக்கொண்டார். ஸபையோர் அதைப் பெருத்த கரகோஷத்துடன் ஏற்று க்ருதார்த்தரானார்கள். இப்படியே மற்ற மடாதிபதிகளுடைய மங்களாசாஸநங்களையும் எதிர்பார்க்கின்றோம். பிறகு திருமங்கலம் வித்வான் ஸ்ரீ. உ. வே. நடாதூர் நரஸிம்மாசர்யர் ஸ்வாமி ப்ராண ஹுதி முதலியவற்றைப்பற்றி எழுதியிருந்த வ்யாஸத்தைப் படித்துக்காட்டி அதைத் தீபிகையில் ப்ரசுரிப்பதாகத் தெரிவித்தார். ஸபைக்குயாத்ருச்சிகமாக விஜயம் செய்திருந்த ப்ரும்ம ஸ்ரீ விச்வேச்வர சாஸ்திரிகள் அக்ராஸநரின் வேண்டுகோளுக்கிணங்கி விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தைப்பற்றி வெகுநன்றாய் உபந்யஸித்து விசிஷ்டாத்வைத க்ரந்தங்களில் தாம் நன்றாய்ப் பரிச்ரமப்பட்டிருப்பதையும் வெளிப்படுத்தினர்.

இதன்பிறகு வித்வத்ஸம்மானங்களும் அக்ராஸநர் முதலியவர்களுக்கு வந்தனமொழிகளும் நடந்தன.

இதோடு மஹாஸங்கம் முடிவுபெற்றது. நடவடிக்கைகளை ஆதியோடந்தமாகக் கண்டவர்களுக்கு அவைகள் பூர்ணமான ஆநந்தத்தையும் உத்ஸாஹத்தையுமே கொடுத்தன. அநேக விக்னங்களுக்கிடையே பகவத் க்ருபையொன்றையே அவலம்பித்து ஸபாப்ரவர்த்தகர்களும் க்ருதார்த்தரானார்கள்.

கடைசியாய் நமது ஸபையின் வர்ஷாந்தக் கார்யக்கூட்டம் கூடிற்று. அதன் விவரங்களைக் கார்யதர்சி தனியாய் மற்றொரு பக்கத்தில் ப்ரசுரித்திருக்கிறார்.

ஸ்ரீ:

# ராமாயண தத்வார்த்தம்.

(முன்தொடர்ச்சி)

## ஹித நிரூபணம்.

அந்தப் பகவானை அடைவதற்கு உபாயம் சரணாகதி. இதுதான் பரம ஹிதமாயிருப்பது. இதை ஜாதி முதலிய நியமமில்லாமல் எல்லோரும் அநுஷ்டிக்கலாம்; ஒரு தடவையே செய்யப்படவேண்டியது; ஸுலபமானது; ஸர்வபலங்களையும் கொடுக்கவல்லது; பக்தியோகத்தினால் போக்கமுடியாத ப்ராரப்த (பலங்கொடுக்க ஆரம்பித்துவிட்ட) கர்மங்களையும் போக்கவல்லது; இசைந்த காலத்தில் பலம் கொடுக்கவல்லது. இதைக்காட்டிலும் வேறொன்றும் மேற்பட்ட ஹிதமாகாது. இந்தச் சரணாகதியை ஸ்ரீமத் ராமாயணம் பூர்ணமாய்ச்சொல்லுகிறபடியால் இதைத் தீர்க்கசரணாகதி யென்றது.

பாலகாண்டத்தில் (1) ‘ நீர்தான் உபாயமும் உபேயமும் ’ என்று தேவர்கள் துதித்தார்கள். த்ரிசங்கு, சுநஶ்ஶேபன் முதலியவர்களுடைய வ்ருத்தாந்தங்களில், விச்வாமித்ரர் முதலியவர்களின் வ்யாபார விசேஷங்களால் சரணாகதனைக்காப்பாற்றுவது பரமதர்மமென்பதும், ஸமர்த்தனும் கருணையுள்ளவனுமானவனைப் பற்றவநுஷ்டிக்கப்படும் சரணாகதி கோலின பலத்தைக்கொடுக்குமென்பதும் சொல்லப்பட்டன.

அயோத்யாகாண்டத்தில் (2) ‘ அந்த லக்ஷ்மணன், ஸீதை முன்னிலையில் (ராமனுடன் சென்று அவன் கைங்கர்யம் பெறுவதாகிய பலம் கிடைப்பதற்கு) ப்ராதாவான ராகவன் திருவடிகளைப் பிடித்துக்கொண்டு ப்ரார்த்தித்தார் ’ என்கையால் இளையபெருமாள்சரணாகதி சொல்லப்பட்டது. ஸ்ரீபரதாழ்வான், ஸ்ரீராமனைத் திருவபிஷேகம் செய்விக்க ப்ரபத்தி செய்தவிடத்தில், தேவர்களுக்கு முன்னரே செய்திருந்த ப்ரபல ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றி வந்து பட்டாபிஷேகம் கண்டருளுவதாய்க்கோலி, அதுவரையில் தனக்கு ப்ரதிநிதியாகத் ‘ தன்னிலும் சீரிய திருவடிநிலைகளை ’, ‘ மரவடியைத் தம்பி

1. ‘ த்வம் கதி: பரமா ’

2. ஸ ப்ராதுச்சரணௌ காடம் நிபீட்ய ரகுநந்தந: ।
ஸீதாமுவாசாதியசா ராகவம் ச மஹாவ்ரதம் ॥’



க்கு வான்பணயம் வைத்துப்போய் ’ என்றபடியே யீந்து பரதன் மனோரதத்தைத் தலைக்கட்டியதாலும், அங்கும் ப்ரபத்தியின் பலம் பூர்ணமாயிற்று, ஆரண்யகாண்டத்தில் ‘ கர்ப்பபூதாஸ்தபோதநா: ’ (தபோதனர்கள் அவன் குழந்தைகளைப்போன்றவர்கள்), என்று சரணமடைந்த தண்டகாரண்ய வாஸிகளான முனிவர்கள் சரணாகதி செய்த ப்ரகாரமும், அதற்குப் பலமும் தெரிவிக்கப்பட்டன. கிஷ்கிந்தாகாண்டத்தில் த்ரிஜடை பிராட்டி திருமுன்பே செய்த சரணாகதியும், அதில் மற்ற ராக்ஷஸிகளுமடங்கின ப்ரகாரமும் காட்டப்பட்டது. ஸுந்தரகாண்டத்தில் ‘ பிதாவினாலும் மாதாவினாலும் மஹர்ஷிகளாலும் கைவிடப்பட்டவனாய் மூன்று உலகங்களிலும் அலைந்து வேறு கதியின்றியிருந்த காகாஸுரன் அந்த ராமனையே சரணமடைந்தான் ’ என்கையாலே, சரணாகதிக்கு வேறு உபாயங்களில் ஸாமர்த்திய மில்லாமையும் வேறு ரக்ஷகனில்லாமையுமே அதிகாரம் என்பது விளக்கப்பட்டது. யுத்தகாண்டத்தில் விபீஷண சரணாகதி விஸ்தாரமாகப் பேசப்பட்டது. இது ஸ்ரீவால்மீகி ஸாக்ஷாத்கரித்த சரணாகதிவேதமாகிற ஸ்ரீமத் ராமாயணத்துக்கு உபநிஷத்துப் போல் ஸர்வ ரஹஸ்யார்த்தங்களையும் திரளவெளியிடுகிறது. உத்தரகாண்டத்தில் மால்யவான் முதலியவர்களோடு பகவான் சார்ங்கமுதைத்த சரமழைகளாலே போர்புரிந்து, அவர்களோடவும் பின்தொடர்ந்து நலிய, அரக்கர் 1. ‘ நாராயணனே க்ஷத்ரியதர்ம மறியீரோ ’ என்று கேட்க, ‘ நாராயண தர்மமாகிய சரணாகத ரக்ஷண தர்மத்தை அநுஷ்டிக்கிறோ ’ மென்று அபிப்ராயம் தோற்ற, 2. ‘ உங்களிடமிருந்து பயந்து சரணம் புகுந்த தேவர்களுக்கு ராக்ஷஸ நாசமாகிய அபயப்ரதானம் செய்தோமாகையால், உங்களை நலிகிறோம் ’ என்று பயிர்களைபோலசுரரைக் காய்ந்த வண்ணத்தையருளிச்செய்ததினால் சரணாகத ரக்ஷணமே பரமதர்மமென்பது பகவானாலேயே பேசப்பட்டது.

இப்படி ஏழு காண்டத்திலும் சரணாகத ரக்ஷணதர்மமொன்றுமே ‘ அஞ்சுறுவாணியாகக் கோக்கப்பட்டது. இந்த ப்ரபந்தம் சரணாகதி சாஸ்த்ரமென்பது ஆரம்பத்தில் தானே ‘ தவஸ்ஸாயுஜ்ய கிரதம் ’ என்று ‘ தவ: ’ சப்த

1. ‘ ஸ பித்ரா ச பரித்யக்த: ஸுரைச்ச ஸமஹர்ஷிபி: ।
த்ரீன் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ சரணம் கத: ॥’

1. ‘ நாராயண ந ஜாநீஷே க்ஷாத்ரதர்மம் ’

2. பயார்த்தாநாம் ஸபீதாநாம் தேவாநாம் [illegible] ।
ராக்ஷஸோத்ஸாதநம் தத்தம் [illegible] பால்யதே ॥’

ப்ரயோகத்தாலேயே தெரிவிக்கப்படுகிறது. 3. 'எல்லாத் தபஸ்ஸுகளையும் காட்டில் சரணாகதியாகிற தபஸ்ஸு மேலானதென்றார்கள்' என்றர்த்தமுள்ள ச்ருதிவாக்யத்தைக் கொண்டு இவ்வர்த்தம் நிரூபணமாயிற்று.

## புருஷார்த்த நிரூபணம்.

புருஷனால் அர்த்திக்கப்படுவது (அதாவது மனிதனால் வேண்டப்படுவது) புருஷார்த்தம். இது அவரவர்கள் அபிப்பிராயங்களின்படி அநேக விதமாயிருக்கும்; தேவதைகளுக்கு ராவணவதம், த்ரிசங்குவுக்குச் சரீரத்துடன் ஸ்வர்க்கம் செல்வது, சுநஃசேபனுக்குத் தன் உயிர் தப்புவது, லக்ஷ்மணனுக்கு இடைவிடாத ராமகைங்கர்யம், பரதாழ்வானுக்கு ராமபட்டாபிஷேகம், தண்டகாரண்யவாஸிகளுக்குக் கரதூஷணாதி நாசம், த்ரிஜடைக்கு ராமபய நிவ்ருத்தி, காகாஸுரனுக்கு ப்ராணரக்ஷணம், விபீஷணனுக்கு ராமகைங்கர்யம் என்ற ப்ரகாரங்களில் புருஷார்த்தங்களைக் கண்டு கொள்வது.

## ப்ரபத்திக்கு எவ்வித நியமங்களுமில்லையென்பது முதலியன.

ப்ரபத்திக்குத் தேசநியமம், காலநியமம், அதிகாரி நியமம், ப்ரகார நியமம்; பலநியமம் இவையொன்றுமில்லை என்பதும் காட்டப்பட்டது. பகவான் அயோத்தியின் ஸ்தாவரங்கள் ஜங்கமங்கள் உள்பட எல்லாவற்றையும், விஷயவாஸத்தையே பற்றாசாக நம்பானுக்குப்[illegible] னனிறே! ஸ்ரீவைகுண்டத்தில் தாம் வீற்றிருக்கும் இருப்பைப்போல் ராமன் வீற்றிருந்ததை ஸுமந்த்ரர் ஸேவித்தபடி இங்கும் 'தம் வைஶ்ரவண ஸங்காஶம்' (குபேரனைப்போல் ப்ரகாசித்துக்கொண்டிருந்த அவனை) என்றாரம்பித்து, 'வவந்தே வரதம் வந்தீ விநயஜ்ஞோ விநீதவத்' (விநயத்தையறிந்த ஸுமந்த்ரர் அதிக வணக்கத்துடன் ஸ்துதிவசநங்களைச் சொல்லிக்கொண்டு வேண்டுவதைக்கொடுக்கும் ஸ்ரீராமனை நமஸ்கரித்தார்) என்னுமளவாகச்சொல்லப்பட்டது. இதனால் அவதாரதசைகளில் பகவான் ஸேவை ஸாதிக்கும் ப்ரகாரங்களிலிருந்து ஸ்ரீவைகுண்டத்தில் திருமாமணிமண்டபத்தில் அவனிருப்பு இத்தகையதாகவிருக்குமென்பது அறியலாமென்றதாயிற்று. 'ஸர்வே வேதா யத்பதமாமனந்தி தபாம்ஸி ஸர்வாணி ச யத்வதந்தி' என்றபடியே வேதமுத்கோஷிக்கிற கணக்கில் தன்னையடைவதற்குத் தானே ஸாதனமாயிருக்கும் பகவான் தானே, புருஷார்த்தங்களிலெல்லாம் மேற்பட்டவரென்பதும் நன்றாய்த் தெரிவிக்கப்பட்டது.

---

3. 'தபஸாம் ந்யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹு:'



## இதர தர்மங்களின் நிரூபணம்.

இதில் யஜ்ஞவிசேஷங்களும், ஸ்ரீராமன் மாதாவினுடையவும் பிதாவினுடையவும் வாக்யங்களைப் பரிபாலநம் செய்தது, தர்மம் ஸத்யம் முதலியவற்றைக்காப்பாற்றியது முதலிய ஸமான்ய தர்மங்களும், லக்ஷ்மணன் அநுஷ்டித்துக்காட்டிய பகவத் சேஷவ்ருத்தி (பகவானுக்கு அடிமைப்பட்டுக் கைங்கர்யம் செய்தல்) ஆகிய விசேஷ தர்மமும், பரதாழ்வான் நிரூபித்த பாரதந்த்ரியமும் (தான் தனது என்பதில்லாமல் எதையும் ஈச்வரனுக்குப் பரதந்த்ரனாக அவன் நியமனப்படி செய்தல், சத்ருக்நாழ்வான் விளக்கிய பாகவத சேஷத்வ ப்ரதிபத்தியும் (பாகவதர்க்கே அடிமை பூணுதலும் முதலியவையெல்லாம் விரிவாய்த் தெளிவாய்க் காட்டப்பட்டிருக்கின்றன.

## ஆசார்ய க்ருத்யம்.

இது முக்கியமாய் ப்ரதிபாதிக்கப்பட்டது. ஹநுமானாகிய ஆசார்யன் ராமனாகிய வைகுண்டநாதன் நியமனம் பெற்று, பத்து இந்திரியங்களாகிற முகங்களையுடைய மனதாகிற ராவணனுக்கு லங்கையாயிருக்கும் சரீரத்தில், ராக்ஷஸிகளாகிற சுற்றத்தாரால் உபத்ரவிக்கப்பட்ட ஸீதையாகிற சேதநனைப் பார்த்து, அங்குளீயகமாகிற திருமந்த்ரத்தை யுபதேசித்துச் சூடாமணி ப்ரதானமாகிற பந்யாஸத்தைச் செய்வித்து, பகவானுக்குத் தெரிவித்து அவனிடத்தில் ஸீதையைச் சேர்ப்பிக்கச்செய்த க்ருஷிகளில் ஆசார்ய க்ருத்யமும், ப்ரபத்திக்குப் பிறகு சேதனன் பகவானையே எதிர் பார்த்திருக்கவேண்டுமென்பது ஸீதையினிருப்பினாலும் துலங்கும். இவ்வர்த்தத்தை 'தேவேந்த்ரதந்த்ரேண தநுஜபுரே ராக்ஷஸீபி: ஸம்ருத்தே தாவத்ரக்ஷாம் ததானாம் தஶமுககுஹரே ஸீதாம் ஹநூமான் பாஷணானுக்ரஹோ விதாய பத்மாக்ஷ்யம் ஸகாஶம் ஸுந்தரோ ராஜநயோ நயதி யஶஸ்வி ॥' என்று ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதய ச்லோகத்தினால் ஸ்ரீதேசிகனருளிச்செய்தார்.

இப்படியே மற்றுமுள்ள தத்வார்த்தங்களை அறியவேண்டும்.

கமலாபுரம். காடந்தேத்தி. வெ. கோபாலாசார்யர்.

ஸ்ரீ:.

# துளஸி.

இதைப்பற்றிய சிலகதைகளுண்டு அவையாவன: ஒருகிராமத்தில் பிராம்மணனொருவன் வேதம் ஆசாரமில்லாமல் 'கிருஷித்தொழில்' செய்துகொண்டிருந்தான். தினந்தோறும் வனத்திற்குசென்று புல்பிடுங்கிவருவது வழக்கம். ஒருதினம் புற்களைப்பிடுங்கிவைத்துவிட்டு அங்குப் பக்கத்தில் செழிப்பாய் வளர்ந்திருந்த 'துளஸிச்செடியைக்கண்டு இதின் பிரபாவம் தெரியாதவனாய் இவைகளை வீட்டுக்குக்கொண்டுபோய் விசாரித்து மாட்டுகோ மனிதனுக்கோ உபயோகப்படுமாவென்பதை அறிவோமென்றெண்ணிச் சிலசெடிகளைப்பிடுங்கிக் கொண்டான். இதற்குள் 'இவனது கெட்டசெயல்களால், இவனுக்காயுள்காலம்குறுகி மிருத்யுவாலேவப்பட்ட சர்ப்பமொன்று திருத்துழாய்ப்ரபாவத்தா லிவனிடம்வரமுடியாமல் துளசிஇல்லாதசமயத்தில் கடிக்களெண்ணிப் புற்சுமையில் பதுங்கிஇருந்தது. வழக்கம்போல் புற்சுமையைத் தலையிலெடுத்துகொண்டு பிராம்மணன் வருகையில் துளஸிதளத்தால் பகவானை யர்ச்சனை செய்துவரும் பக்கத்துவீட்டுப்ராம்மண னிவன்தலைப்புல்சுமையில் பாம்பையும் இவனைப்பின்பற்றிவரும் யமகிங்கரர்களையும் புண்யவசத்தால்கண்டு சங்கதிகளை விசாரிக்கையில், கிங்கர்கள் இவனைக் கொண்டுபோகவந்து தாங்கள் திருத்துழாய்க்கு அஞ்சிஇருப்பதையும், அதுஇல்லாத சமயம்பார்த்து இவனைக் கொண்டுபோகப் போவதையும் அறிவித்தார்கள். இதைக்கேட்ட பிராம்மணன், வருத்தமுற்று இவனைமீட்கும்வழி யென்னவென்றதற்கு நீ துளசியர்ச்சனைசெய்தபலனைத்தந்தால் இத்துயரம் நீங்குமென்று கிங்கரர்கள்மொழிய, பரோபகாரசிந்தையுள்ள பிராமணனுமப்படியே தன்சுகிருதத்தைக்கொடுத்து ரட்சித்தான். பிராம்மணனும் நடந்த வரலாற்றை யவன்மூலமாயே தெரிந்துகொண்டு தினந்தோறுந் தவறாதுபகவானைத்துளசீதளங்களாலர்ச்சித்து ஆராதனைசெய்து நல்லகதி யடைந்தான் என்றுநாரத புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பாத்மபுராணத்திலும், ஒருசமயம் நாரதர் துவாரகையில் சத்யபாமை கிருஹத்திற்கு எழுந்தருளினார். அவரையுபசரித்து, பாமை யொருபொழுதும் தனக்கு கிருஷ்ணனுடையபிரிவு, வராமலிருக்கு மார்க்கத்தைக் கேட்டாள். அதற்கு, நாரதர் கொடுக்காதவனுக்கு ஒன்றும் கிடைக்காது, எதைக்கொடுக்கிறோமோ அது எப்போதும் கிடைக்குமென்றார். உடனேசத்யை கண்ணனை நாரதருக்குத்தானம்செய்ய நாரதரும்மகிழ்ச்சியுடனே கண்ணனையழைத்துச் செல்லமுயன்றார். அதுகண்டு பாமையும் 'முனிவரே' இந்தலோகத்திலேயே 'கண்ணனைப்பிரித்துவிட்டீர்' பரலோகத்திலிது எங்குநேரப்போகிறதென்றாள் 'ஆனால் இவன் அளவு திரவியம் கொடுத்தால் இவரைவிட்டுப்



போகிறேனென்றார், முனிவரும் தராசில் திரவியங்களையும், கிருஷ்ணனையும்வைத்து நிறுக்கவே எத்தனைவைத்தும் சமமாகவில்லை. கிருஷ்ணன் நியமனத்தினாலேயேதிருத்துழாய்தளமொன்றைவைக்கத்தட்டுசமமாகிவிட்டது. நாரதர் அதைப் பெற்றுக்கொண்டு சந்தோஷமாய்ச் சென்றதும், சத்யபாமை கண்ணனைக்கட்டிகொண்டு என்ன எனதுபாக்கியம் இப்படி யோகிகளாலுமடையமுடியாத உன்னைத்தானம்செய்யும்படி விதேயனாகப்பெற்றும் பூலோகத்தில் பாரிஜாதம் புழைக்கடையில் இருக்கப்பெறவும் முன்ஜன்மத்தில் என்னசுகிருதம் செய்தேனோ 'அதை க்காந்தா சொல்லவேண்டும்; தெரிந்துகொண்டு' அதைத்திரும்பவுமனுஷ்டித்து 'உனதுநித்யயோகத்தையடையவேண்டுமென்றாள். பகவானும் ப்ரியே என்னரஹஸ்யமாயிருந்தாலும் சொல்லுகிறேன். முன்பு மாயாபுரியென்னும் பட்டணத்தில் தேவசர்மாவென்னும் பிராம்மணன் தர்மமுறை தவறாமலிருந்து கொண்டுவந்ததுடன் 'சூரியனையுமுபாசித்துவந்தான். அவன் அனுக்கிரஹத்தினாலேயே குணவதி யென்னும்புத்ரியையடைந்தான். நற்குணம்வாய்ந்த அக்கன்னிகையைத் தன்னிடம் வேதாப்யாசம் செய்துவந்த சந்திரன் என்பவனுக்குக் கல்யாணம்செய்து கொடுத்துத் தன்வீட்டிலேயே அவனையும்வைத்துக் கொண்டிருந்தான். ஒருநாள் இருவர்களும் தர்ப்பைசமித்துக்கள் கொண்டுவரவனஞ்சென்றிருக்கையில் அங்கொரு அரக்கனால் வதிக்கப்பட்டு வைகுண்டம் அடைந்தார்கள். புருஷனும் தகப்பனுமிறந்ததையறிந்தகுணவதியும் அவர்களுக்குச் செய்யவேண்டியதை நடத்திவிட்டு ஸ்நானம் உபவாஸம் முதலியவைகளால் பகவானிடம் பக்தியாயிருந்து காலத்தைக்கழித்து வருகையில் கங்கையில்முதலையால் விழுங்கப்பட்டு வைகுண்டத்தையடைந்தாள். தேவர்களால் யாசிக்கப்பட்டுப் பூபாரத்தை தொலைக்க வைகுண்டவாஸியான நான் கண்ணனாயவதரிக்கவே எனதுகணங்கள் யாதவர்களாயும், தேவசர்மா சேத்ராவஜித்தென்பவனாயும் பிறந்தார்கள். நீயே அக்குணவதி. எந்தக் கர்மங்களிலு மென்னையே ஆராதித்துவந்ததால் நானுனக்கு இவ்வளவு பவ்யனான பதியானேன். எனது ஆலயவாசலில் துளஸீதோட்டம்போட்டும் தீபங்களேற்றியும் வந்ததால் இப்பாரிஜாதம் 'இங்குவரலாச்சு 'அஷ்டலட்சுமியுமுன் கிருஹத்திலிருக்கிறார்கள்' இம்மாதிரிசெய்பவருக்கு இவைகள் நிச்சயமுண்டாகுமென்று பகவான் சத்யபாமைக்கு அருளிச்செய்ததாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னுமதேபுராணத்தில் சோழராஜன் ஒருசமயம் அனந்தசயனம்சென்று அநந்த பத்மநாபனைச்சேவித்து அவன்திருவடிகளில் முத்துரத்னம் ஸ்வர்ணபுஷ்பங்களால் அர்ச்சனைசெய்துவிட்டுநின்று கொண்டிருந்தான். அங்கு ஒருவிஷ்ணுதாஸர்வேகமாய்த்தீர்த்தக்குடம்துளஸிக்கூடையுடன் 'வந்து தீர்த்தத்தால் பகவான் திருவடிகளைவிளக்கித்துளஸிகளால் 'அர்ச்சனைசெய்தான்' இதைக்கண்டஅரசன், யாரடாபக்தியில்லாத மூடன்நானர்ச்சித்த முத்துமுதலியவற்றைக் காட்டுத்தழைகளால் மறைத்துப் பகவானுடையதிருவடியின் சோபையைக் கெடுப்பவன்என்று அதட்டினான். விஷ்ணுதா

ஸனும் அரசனென்றுமதியாமல் அரசே! ஏன் வீண்கர்வம் உனக்குபக்திஸ்வரூபத்தை நன்றாயறிந்தாய்போல. எத்தனை விரதங்கள் இதுவரையில் பகவானைக்குறித்து அனுஷ்டித்திருக்கிறாய் என்றான். அரசனுக்குக் கோபமுண்டாகிவிட்டது அடே! பையா இல்லாதபிச்சைக்காரப்பதரே! நீதான் பக்தியைத்தெரிந்துகொண்டவன்போல் கர்வமடைந்திருக்கிறாய். பணமில்லாத நீ எத்தனை விரதங்கள் செய்து கோவில் குளங்கள் நிர்மாணம் செய்திருக்கிறாய். பிராம்மணர்களே இந்தப் பிச்சைக்காரனுக்கிருக்கும் கர்வத்தைப் பாருங்கள் 'பகவானை யார் காண்கிறார் பார்ப்போம்' பிறகு எங்களிருவர்களின் பக்தி தெரியுமென்று சொல்லிவிட்டு ராஜன் தனது இருப்பிடஞ்சென்று வைஷ்ணவயாகமொன்றை ...கு தானதர்மாதி விமர்சையுடன் பகவானைக் காண ஆரம்பித்து நடத்தலா... விஷ்ணுதாஸனும் அதே ஊரில் ஓரிடத்திலிருந்து விடாது துளசியின் த... களை யெடுத்து ஆதரவுடன் அர்ச்சனை செய்துகொண்டு பகவானைத் தினமாராதித்துவந்தான். ஒரு நாள் இவன் பாகம்செய்து வைத்துவிட்டுத் திருவாராதனம் செய்துகொண்டிருக்கையில் அவ்வன்னத்தை யாரோ திருடிச் சென்றுவிட்டான். அர்ச்சனைக்கு ப்ரதிபந்தம் கூடாதென்று மறுபடி பாகஞ் செய்யவில்லை. இப்படி ஏழுநாள் உபவாசத்துடன் செல்லவே, எட்டாவது நாள் இதைக் கண்டு பிடிக்கவேண்டுமென்றெண்ணிப் பாகஞ்செய்து வைத்துவிட்டுப் பக்கத்தில் மறைந்திருந்தான். வழக்கம்போல் அன்னத்தை யபஹரிக்குமவன் வந்து அதை யெடுத்துச் செல்வதை, தாஸன் காண்கையில் மெலிந்து நரம்பு மெலும்புமான உடம்புடனும் தைன்யத்துடன் கூடின முகத்துடனுமிருக்கும் சண்டாளனான அவன் நிலைமை இவனுக்குப் பரிதாபத்தை யுண்டாக்கிவிட்டது. உடனே 'ஓய் நில்லும் நில்லும், நெய் முதலியவில்லாமல் இதை எப்படிப் புசிப்பீர். இதோ அவைகளைக் கொண்டுவருகிறேன் என்று தாஸன் சொல்வதைக் கேட்டு அந்தப் புருஷன் பயத்தால் ஓட ஆரம்பித்தான். நடக்க முடியாமல் தடுக்கிக் கீழே விழுந்து மூர்ச்சித்துவிட்டான். தாஸன் ஓடிப்போய் ஐயோ! தினம்போல் அபஹரித்துப் போகட்டுமென்றிராமல் ஏன் இக்கார்யம் செய்தேன் என்று தபித்துக்கொண்டு அவனுக்கு விசிறி முதலியன கொண்டு உபசரித்துக்கொண்டிருக்கையில், திடீரென்று அப்புருஷனைக் காணவில்லை. ஆனால் சங்கம் சக்கரம் முதலிய பஞ்சாயுதங்களுடன் பீதாம்பரதாரியாய்ப் பகவான் சேவை சாதித்ததைக்கண்டு தாஸன் திடுக்கிட்டு ஒன்றும் தோன்றாவதனாய் நிற்கையில் பகவான் உன்னுடைய பாவ சுத்தியும், பாஹ்ய சுத்தியும் கூடின துளஸியின் அர்ச்சனையால் மகிழ்ந்தேன். உன்னுடைய நிதான புத்தியைப் பரீக்ஷிக்க நினைத்து இதுகாரியஞ் செய்யலானேன். என்ன பொறுமை! என்ன நிதானம்! எட்டுநாளுபவாஸம். அன்னத்தைச் சண்டாளனபஹரிப்பதைக் கண்டும், மனம் பதறாமலிருந்தும் அவன் தசையைக் கண்டு பரிதபித்ததும் வியக்கத்தக்கன. இப்படிப்பட்ட சாந்தி யுள்ளவனுக்கே நான் ஸேவை கொடுப்பேன். இந்தச் சாந்தியும் துளஸியின் அர்ச்சனத்தாலே



யுனக்குண்டானதென்று பலபடி புகழ்ந்து விமானத்திலேற்றிவைத்துக்கொண்டு, அரசன் யாகபூமிக்கு நேராக ஆகாயமார்க்கமாய்த் தாஸனை யழைத்துக்கொண்டு எழுந்தருளினார். இதைக் கண்ட ராஜனும் தாங்காதவனாய் முத்கலரென்னும் தனது ஆசாரியனை நோக்கி, யாகதானாதிகளொன்றும் தாஸனுடைய துளசியர்ச்சனைக்கும் பக்திக்குமீடாகவில்லையேயென்று சொல்லிவிட்டு, தனக்குச் சந்தானமில்லாமையால் மருமகனுக்குப் பட்டங்கட்டிவைத்துவிட்டு, அக்னிகுண்டத்திலேயே நிர்வேதத்துடன் பக்தி வேண்டும் பக்தி வேண்டும் எனப் பிரார்த்தித்துக்கொண்டு விழுந்து இறந்தான். பகவானும் அவனுடைய நிர்வேதத்துக்கிரங்கிப் பூலோகத்தில் அவனைப் பக்தனாய்ப் பிறப்பித்துத் தனது பதவியையளித்ததாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. 1. ஆதலால் இப்படி மகாப்பிரபாவமுள்ள துளசியை ஶ்ரத்தையுடன் வைத்துப் பயிராக்கிப் பகவானுக்கு அர்ச்சனை செய்துவந்தால், ரங்கநாதன் பாதுகைகளில் ஸமர்பிக்கப்படும் துளஸிகள் ரங்கநாதனென்னும் பாம்பாட்டியின் சக்தியால் நமது ஸம்ஸாரமென்னும் பாம்பை யடக்கச் சித்தர் மூலிகையாகின்றன. 2. ரங்கநாத பாதுகையின் துளஸியில் படும் காற்றுக்கள் நமது சரீராவஸானத்திலுண்டாகும் ஶ்ரமத்தைப் போக்குகின்றன.) என்று தேசிகன் அருளிச்செய்திருக்கிறபடி நாம் சுலபமாய் ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டுச் சௌக்யத்தை அடைவோமென்பது நிச்சயம்.

நெடுந்தெரு-ஸ்ரீனிவாஸன்.

ஸ்ரீ:.

## சென்னை ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் அங்கத்தினர்களின் பதின்மூன்றாவது வார்ஷிக மஹாஸங்கம்.

இச்சங்கம் சென்ற மார்கழிமீ 11உ ஸாயங்காலம் 4-மணிக்குக் கூடிற்று.

ஸ்ரீ. உ.ப. வே, வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி அக்ராஸநம் வஹித்தார். கார்யதர்சியால் தீபிகையின் மூன்றாவது ஸஞ்சிகையில் வெளியிடப்பட்ட வருஷாந்த அறிக்கை அங்கத்தினர்களால் அங்கீகரிக்கப்பட்டது.

---

1. [illegible]

2. [illegible]

பிறகு ஸ்ரீமான் உப்பட்டூர் ஆழ்வார் செட்டியாரவர்களை ஸபையின் போஷகராயிருக்கும்படி எல்லா அங்கத்தினரும் ஏகமனஸாய்த் தீர்மானித்தார்கள். பிறகு கீழ்க்குறிக்கப்பட்டிருக்கும் பிரகாரம் நிர்வாகஸபையோர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

ஸபாத்யக்ஷர்.

ஸ்ரீ. உப. வே. ராவ்பஹதூர் S. ராமஸ்வாமி அய்யங்கார் பி. ஏ., பி. எல்.
மயிலாப்பூர்.

ஸபாத்யக்ஷ ப்ரதிநிதிகள்.

1. ஸ்ரீ. உப. வே. வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், பி. ஏ., பி. எல். பார்க்டவுன்.
2. ஸ்ரீ. உப. வே. எஸ். ராஜகோபாலாசார்யர், பி. ஏ. மன்னார்குடி.
3. ஸ்ரீ. உப. வே. தி. கோதண்டராமய்யங்கார், பி. ஏ., எம். எல். தஞ்சாவூர்.
4. ஸ்ரீ. உப. வே. அன்பில் கோபாலாசார்யர், எம்.ஏ., பி. எல். திருச்சிறுப்பள்ளி.
5. ஸ்ரீமான். திவான்பஹதூர், டி. நம்பெருமாள் செட்டிகாரு, பி. ஏ.
சேத்துப்பட்டு.

கார்யதரிசிகள்.

1. ஸ்ரீ. உப. வே. எஸ். கோபாலஸ்வாமி அய்யங்கார், பி. ஏ., பி. எல்.
மயிலாப்பூர்.
2 ஸ்ரீ. உப. வே. ஆர். ஸ்ரீநிவாஸராகவய்யங்கார், எம். ஏ. புரசைவாக்கம்.

உதவி கார்யதரிசி.

3. ஸ்ரீ. உப. வே. கோமடம் ஸ்ரீநிவாஸய்யங்கார், கோமளேசுவரன்பேட்டை.

தீர்மானங்கள்.

1. இதுவரையில் நிர்வாகஸபை மெம்பர்களாக இருந்தவர்களை முதல் வகுப்பு மெம்பர்கள் என்று வ்யவஹரிக்கவேண்டியதென்றும் நிர்வாக ஸபையாருடைய அதிகாரம் யாவற்றையும் நிர்வாக கம்மிட்டியார் அடைந்து ஸபையின் கார்யங்களை நடத்திவரவேண்டுமென்றும்,

2. நிர்வாகஸபை என்ற வ்யவஹாரம் இனிமேல் இல்லை என்றும்,

3. இரண்டாவது வகுப்பிலிருக்கும் மெம்பர்கள் மூன்று பேர்களாவது நிர்வாக கம்மிட்டியிலிருக்கவேண்டுமென்றும்,

4. நிர்வாகக்கம்மிட்டியில் பன்னிரண்டு மெம்பர்கள் இருக்கவேண்டுமென்றும், அவர்களுக்குள் ஒன்பது பேர்களாவது சென்னையிலிருக்கவேண்டுமென்றும்,

5. வேதாந்ததீபிகை பத்ராதிபர் கம்மிட்டியில் ஒரு மெம்பராக (EX-Officio) இருக்கவேண்டுமென்றும் அங்கத்தினர்களால் தீர்மானிக்கப்பட்டது.



நிர்வாக கம்மிட்டியின் மெம்பர்கள்.

1. ஸ்ரீ. உப. வே. சேட்டலூர் பகவத்விஷயம், பண்டிதபூஷணம் வித்வான் நரஸிம்மாசார்யர், புரசைவாக்கம்.
2. ஸ்ரீ. உப. வே. ராவ்ஸாகிப். டி. எஸ். ஸ்ரீநிவாஸராகவாசார்யர், மருலிப்பட்டணம்.
3. ஸ்ரீ. உப. வே. கே. டி. பார்த்தஸாரதி அய்யங்கார், வேலூர்.
4. ஸ்ரீ. உப. வே. வி. என். செல்லமய்யங்கார், சேலம்.
5. ஸ்ரீ. உப. வே. தி. ஈ. சடகோபாசார்யர், பி. ஏ., பி. எல். திருப்பாப்புலியூர்.
6. ஸ்ரீ. உப. வே. பி. ஆர். க்ருஷ்ணசாமி அய்யங்கார், பி. ஏ., பி. எல். எழும்பூர்.
7. ஸ்ரீ. உப. வே. ஆ. ரங்கசாமி ஸரஸ்வதி, பி. ஏ. திருவல்லிக்கேணி.
8. ஸ்ரீ. உப. வே. ராவ்ஸாகிப். டி. ராமானுஜய்யங்கார், திருவல்லிக்கேணி.
9. ஸ்ரீ. உப. வே. எஸ். கே. பார்த்தஸாரதி அய்யங்கார், பி. ஏ., பி. எல். திருவல்லிக்கேணி.
10. ஸ்ரீ. உப. வே. டி. திருவேங்கடாசார்யர், சென்னை.
11. ஸ்ரீ. உப. வே. கே. எஸ். சம்பகேசய்யங்கார், பி. ஏ., பி. எல். திருவல்லிக்கேணி.
12. ஸ்ரீமான். எஸ். வெங்கடாசலம்பிள்ளை, பி. ஏ., பி. எல். புரசைவாக்கம்.

மேல் குறித்த மாறுதல்களைச் சட்டத்தின் நியமங்களில் மாற்றிக்கொள்ளும்படி தீர்மானிக்கப்பட்டது.

சென்ற வருஷத்தில் கார்யதர்சியாகவிருந்து ஸபையின் கார்யங்களை நடத்திவந்த ஸ்ரீ. உப. வே. ஆர். ஸ்ரீநிவாஸராகவய்யங்கார் ஸ்வாமிக்குத் தங்களுடைய க்ருதஜ்ஞதையைத் தெரிவிக்கிறார்களென்பதும் ஸபைக்கு மெம்பர்களை அதிகப்படுத்தி அதற்கு அவரால் செய்யப்பட்டிருக்கும் நல்ல வேலையை ரிகார்ட் பண்ணவேண்டுமென்பதும் அங்கத்தினர்களால் ஏக மனஸாய்த் தீர்மானிக்கப்பட்டன.

ஸபாத்யக்ஷருக்கும் எழுந்தருளியிருந்த மெம்பர்களுக்கும் கார்யதர்சியால் வந்தனமளித்த பிறகு ஸபை கலைந்தது.

ஆர். ஸ்ரீநிவாஸராகவன்.
கார்யதர்சி.

---

| | |
|---|---|
| (1) விசிஷ்டாத்வைத தத்வம் | 0—3—0 |
| (2) ரஹஸ்யத்ரய ஸாரஸங்க்ரஹம் | 0—8—0 |
| (3) தோர்த்த ஸங்க்ரஹம் | 0—4—0 |

ஸ்ரீ:

# இம்மையும் மறுமையும்.

(முன் தொடர்ச்சி.)

நாம் ஜீவித்திருப்பதற்கு முக்கிய ஆதாரம் ப்ராணவாயுவேயாம். அது முக்கியமாய் அருணோதயகாலத்தில் மின்சாரவிசையில் வெவ்வேறு விதமாக விகாஸத்தை யேற்கிறது என்றும், மரங்கள் பகற்காலங்களில் ப்ராணவாயுவை ப்ரதிகூலமான மின்சாரவிசையாலும் இராப்பொழுதில் வேறுவாயுவை அநுகூலமான மின்சாரவிசையாலும் வியாபரிக்கின்றனவென்றும் சாஸ்திரபண்டிதர்கள் தெரிவிக்கிறார்கள். இவ்விருவகை மின்சார விசைக்கு ப்ராணவாயுவோடு எவ்வித ஸம்பந்தமிருக்கிறதோ, அவ்வித ஸம்பந்தமுள்ள பிராணவாயுவின் தத்வத்தை அறிந்தவர்கள் யார்தான் பிழைத்திருக்கிறதற்கு முக்கியாதாரமாகிய பிராணவாயுவில் அற்ப பாகத்தையாவது பாழாக்க முயற்சி செய்வார்கள் ?

மனிதன் பிழைத்திருப்பதற்கு வாயுவே முக்கியாதாரமென்றும், அது ஒவ்வொரு தேகத்திலும் எவ்வளவு இருக்கவேண்டுமோ அவ்வளவு இல்லாவிட்டால் நோய்களும் கடைசியாய் மரணமும்கூட நேரிடுவது நிச்சயமென்றும் அறியாதார் யார்? ஆகையால் பின் மாலை தூக்கம் தெளிந்தெழுந்திருக்கவேண்டுமென்று நம் சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட முறையை மேனாட்டுச் சாஸ்திர பண்டிதர்கள் அங்கீகரித்துக் கொண்டாடுவதோடு அதற்குக் கீழ்ச்சொன்ன விஷயத்தைக் காரணமாகக் கற்பித்துக் கூறுகிறார்கள்.

## பல் தேய்த்தல்.

இவ்விஷயம் நம்மவர் அனைவருக்கும் தெரிந்ததே. ஆனால் புது நாகரிகர்களில் இதை யறியாதவர்களும் அநுஷ்டியாதவர்களும் சிலர் இருக்கக் கூடும். அப்படி அவர்கள் நடவடிக்கை மாறியதும் மேனாட்டு நாகரிக முதிர்ச்சியின் பயனேயன்றி வேறில்லை. ஆகா ! ஆச்சர்யம் ! ஆச்சர்யம் ! அந்தோ சரிவரப்பல் தேய்த்துவராமையால் எத்தனைபெயர்கள் சிறுவயதிலேயே பற்கள் விழுந்துபோய்க் கிழவர்கள்போல் பொக்கைவாயர்களாய்க் காணப்படுகிறார்கள். அவர் பொழுதெல்லாம் பொய்ப்பற்கள் கட்டிக்கொள்வதிலும் ஆடிப்போன பற்களைப் பிடுங்கிக்கொள்வதிலும் சிரமத்தோடு செலவாகிறது.

பல் தேய்ப்பதற்குக் குச்சியையாவது இலையையாவது உபயோகிக்கவேண்டுமென்று நமது சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இதை



அசட்டை செய்து மயிர் கட்டிய கட்டை (ப்ருஷ்) களை நம்மவர் அனேகர் உபயோகித்து வருவதைக் கண்ணாரக் காண்கிறோம். நம்மவரில் நூற்றுக்கு ஆறு பெயரும், சைனக்காரர்களில் நூற்றுக்கு நாற்பது பெயரும், ஆங்கிலேயர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பெயரும் பல் வலியால் பாதைப் படுகிறார்களென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. பல் தேய்ப்பதற்கு ப்ருஷை உபயோகிப்பதினால் என்ன என்ன அபாயம் நேரிடுமோ அதைப்பற்றி மேல்நாட்டுப் பண்டிதர்கள் விவரித்துக் கூறாமலிருக்கவில்லை. ப்ருஷை உபயோகிப்பதில் பல கெடுதி நேரிடுகிறதென்றும் சிறு பூச்சிகள் அதில் உண்டாகின்றனவென்றும், என்ன செய்தாலும் அவை அதை விட்டுப் போகிறதில்லையென்றும் ப்ருஷையே உபயோகிக்கவேண்டி நேரிடுமானால் ஒவ்வொரு நாளும் புதிதுபுதிதாகவே அதை உபயோகிக்கவேண்டுமென்றும் ஒரு முறை உபயோகிக்கப்பட்டதை மறுமுறை உபயோகிக்கவே கூடாதென்றும் பிரசித்தராகிய ஆங்கிலேய வைத்தியர் ஒருவர் ப்ரிடிஷ் மெடிகல் ஜர்னல் பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார்.

## ஸ்நாநம்.

இவ்விந்தியாவில் அந்தந்தக் காலத்திய சீதோஷ்ண ஸ்திதிக்கு எவ்விதத்திலும் அநுகூலமான வழியில் தெய்வமே ஸ்நாநத்திற்கு வேண்டிய எல்லா ஸௌகர்யங்களையும் ஏற்படுத்திவைத்திருக்கிறது. மேனாடுகளில் குளிர் வெகு அதிகமாகையால் அழுக்கை அலம்ப வேறுவழி தேடவும் ஸ்நாநத்திற்குத் தக்க உபாயம் செய்ய முடியாது போகவும் நேரிடுகிறது. ஒரு வாரத்திற்கு ஒரு தடவை ஸ்நாநம் செய்பவர்களும் அதற்கு அதிக காலங்கூட ஸ்நாநமே செய்யாதவர்களும் அங்கே உண்டு.

(இன்னும்வரும்) ஸ்ரீசைல தாதாசார்யர்.

186735

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

# ஓர் விஜ்ஞாபனம்.

முன் காலத்தில் வித்யா விக்ரயம் அல்லது த்ரவ்ய ஸம்பாதனத்துக்கு வித்யாப்யாஸம் செய்வித்தல் மிகவும் பாபமென்று எண்ணப்பட்டதனால் ஜனங்களுக்கு வித்யாபிவ்ருத்தி செய்துவைப்பது அரசர்களின் கடமையாகவிருந்தது. இதனால் முன்காலத்திய அரசர்கள் ஜலவஸதியுள்ள விடங்களில் அக்ரஹாரங்களை யேற்படுத்தி வித்வான்களை வரவழைத்து அவர்களுக்கு

வாஸத்துக்கு வீடும், ஜீவனத்துக்குப் பூமியும், தானங்கொடுத்துக் கிராமங்களையேற்படுத்தி, அவைகளுக்குச் சாதுர்வேதிமங்கலம் என்று பெயர் வைத்தார்கள். இந்தத் தானங்கள் தாம்ரசாஸனங்களிலும் சிலாசாஸனங்களிலும் சாஸ்வதமாக எழுதிவைக்கப்பட்டிருக்கின்றன. இவ்விதம் க்ராமங்கள் ஏற்பட்டு அவைகளில் வஸித்த ப்ராஹ்மணர்கள் வேதங்களையும், சாஸ்த்ரங்களையும் அப்யஸித்து வந்தார்கள். குழந்தைகளுக்கு அக்ஷராப்யாஸம் செய்யும்பொழுதே ஸ்ரீமத் அஷ்டாக்ஷரத்தைப் பாலில் எழுதி அவர்களுக்குப் பானம் செய்வித்ததினால் அஷ்டாக்ஷர ப்ரதிபாத்யரான பகவான் சிறுவர்களின் புத்தியில் அனுப்ரவேசித்துப் புத்திவிகாஸத்தை உண்டுபண்ணி அவர்கள் வித்யையை நன்றாய் க்ரஹிக்கும்படி செய்வித்தார். அரிச்சுவடிமுதல் வேதாந்தம் வரையுள்ள க்ரந்தங்களில் மனுஷ்யனால் ஸாத்யமானது ஒன்றுமில்லை, எல்லாம் ஸர்வேஸ்வரனாலேயே செய்யப்படும் என்பது புத்தியில் நன்றாய் வேரூன்றும்படி விஷயங்கள் போதிக்கப்பட்டு வந்தன. ஸம்ஸ்க்ருத பாஷையிலிருக்கும் க்ரந்தங்கள், பலம் தெய்வாதீனமென்றும் ஒருவனுடைய ஸாமர்த்யத்தினாலாவது மூடத்தனத்தினாலாவது ஒரு லாபமோ நஷ்டமோ அடைவதில்லையென்றும் வற்புறுத்துவதால், பலத்தில் ஆசையில்லாதவர்களாய் யதாலாப ஸந்துஷ்டர்களாய் க்ருஷியை ஜீவனோபாயமாகக்கொண்டு நம்முன்னோர் வித்யாபிவிருத்திசெய்து தேஹயாத்ரை செய்துவந்தார்கள். தற்காலத்திலோ ஸம்ஸ்க்ருத பாஷையைப் படிப்பது அகௌரவம் என்று எண்ணி இங்கிலீஷ் பாஷையையே சிறுவர்களுக்குக் கற்றுக்கொடுக்கவேண்டுமென்று தங்கள் சொந்த க்ராமங்களை விட்டுப் பட்டணங்களில் குடியேறிவிடுகிறார்கள். படிப்பின் ஆரம்பத்திலேயே, "இது என்ன, அது ஒரு நாய்" என்று ஆரம்பிக்கும் புஸ்தகங்களைப் படித்து ஈஸ்வரனால் ஆவது ஒன்றுமில்லை, மனுஷ்ய யத்நத்தினாலேயே எல்லாவற்றையும் சாதிக்கமுடியும் என்னும் புத்தியை உண்டாக்குகின்ற மேல்நாட்டுக் கல்வியை அப்யஸித்து த்ருப்தி என்பது உண்டாகாமல் இந்திரிய ஸௌகானுபவத்தில் ஈடுபட்டு அதை அடைய த்ரவ்யத்தை ஸம்பாதிக்கவேண்டுமென்ற ஆவலுடன் அவலம்பிக்கத்தகாத ப்ரவ்ருத்திகளைச் செய்து நமக்கு ஸ்வாபாவிகமாக ஏற்பட்ட ஜாதி, குல, ஆசாரங்களை விட்டுவிட்டுக் கேவலம் அர்த்தபரர்களாக இக்காலத்தியவர் இருந்துவருவது ஸஹஜமாகிவிட்டது. நாட்டுப்புறத்தில் வஸிப்பதே நாட்டுப்புறத்தான், என்னும் ஹேளனமான சொல்லுக்குப் பாத்திரமாகிவிட்டது. பிதரு பிதாமஹ, ப்ரபிதாமஹர்களால் அனுஷ்டிக்கப்பட்டுவந்த க்ருஷிஜீவனம், மிகவும் அகௌரவமாகத் தோன்றுகிறது. அதிக மடங்கு லாபம் வரக்கூடிய க்ருஷியைக் காட்டிலும் கேவலம் ஸேவகவ்ருத்தி மிகவும் ச்லாக்யமென்று நினைக்கப்படுகிறது. இதனால் ஜனங்கள் க்ராமங்களை விட்டுப் பட்டணங்களைச்சேர்ந்து விடுகிறார்கள். பிழைப்புக்காகவும், படிப்புக்காகவும் சிலர் போனாலும் உபபத்தியுள்ளவர்களும் க்ராமத்தில் பொழுது போக்குவது



கஷ்டமாக இருக்கிறதென்றும், சித்தாகர்ஷகமான விஷய சுகங்களில் ஈடுபட்டு அதுவே ஸௌகானுபவமென்று நினைத்தும் பட்டணங்களில் வந்து வாஸம் செய்து வருகிறார்கள். இதனால் கொஞ்சகாலமாய் க்ராமங்களே பாழாய்விட்டன.

ஆஹாரம் புத்தியின் விகாஸத்துக்கும், வியாதியில்லாத சுகஜீவனத்துக்கும் முக்கிய காரணமென்று நம் பெரியோர்கள் கூறியிருந்தும் அதில் நம்பிக்கையில்லாமலிருக்கும் ஆதுநிகர்கள், இந்திரியங்களுக்குச் சுகமாய்த் தோன்றுவதை ஸ்வீகரித்து எவ்விதமான ஹோட்டல்களிலும் வர்ஜ்யாவர்ஜ்யமில்லாமல் அன்னபானாதிகளைச் சந்தோஷமாய்ச் செய்து பலர்களுடைய எச்சில் கலந்து ரக்தம் கெட்டு டாக்டர்களாலும்கூட அறியமுடியாத நோய்களை ஸம்பாதித்துக்கொண்டு புத்தி மழுங்கி ஆயுஸின் குறைவையும் அடைகிறார்கள். பகவானால் நம்முடைய உபயோகத்திற்காக எவ்வளவோ ஓஷதிகள் ஸ்ருஷ்டிக்கப்பட்டும், அவைகளின் உபயோகத்தைத் தெரிந்துகொள்ளாமல் ஒரு பச்சிலையினால் செய்துகொள்ளக்கூடிய சிகித்ஸைக்கு இங்கிலீஷ் டாக்டர்களிடம் போய் ஏராளமாகத் தனவ்யயம் செய்துவருகிறார்கள். இதற்காகவே இவர்கள் க்ராமத்தைவிட்டு நகரவாஸம் செய்ய விரும்புகிறார்கள். போலும் முன்காலத்தில் ருஷிகள் காய் கிழங்குகளைப் புஜித்துக் காட்டில் வாஸம் செய்தது ஸ்வாரஸ்யமில்லையென்று நினைத்து நாடுகளில் வந்து வாஸம் செய்ய ஆரம்பித்து, அவ்விடம் கிடைக்கும் பதார்த்தங்களை ருசியென்று நினைத்து புஜித்து வந்ததினால் கணக்கில்லாத வ்யாதிகளை ஸம்பாதித்தார்களென்றும், அவைகளுக்குப் பரிகாரம் செய்யவேணுமென்று மறுபடி ஹிமயமலைக்குச் சென்று எல்லாரும் ஒன்றுசேர்ந்து ஆலோசனை செய்யும்போது இந்த்ரன் அவர்களுக்கு மருந்துகளை உபதேசித்தான் என்றும், பிறகு அவர்கள் வைத்ய க்ரந்தங்கள் நிர்மாணம் செய்தார்கள் என்றும் சரகஸம்ஹிதையில் சிகித்ஸா பாதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி ஆஹார நியமத்தைக்கடப்பதால் புத்தி, தைர்யக்குறைவு, கண்டத்வனி கெடல், தேஹத்தின் வர்ண மாறுதல் முதலான பல தீங்குகள் உண்டாகின்றனவென்று ஆயுர்வேத வைத்ய க்ரந்தங்களில் கூறப்பட்டிருக்கிறது.

நம் பெரியோர்கள் நித்யகர்மானுஷ்டானங்களை நம்முடையதேஹ ஆரோக்யத்துக்காகவும் புத்திவிகாஸத்திற்கும் பாரலௌகிகத்துக்காகவும் ஸரிவர அனுஷ்டானத்திற் கொண்டுவர வேணுமென்ற ஆவலால் அவைகளை மதத்துடன் ஸம்பந்தப்படுத்தியும் அப்படிச் செய்யாவிட்டால் பாபமென்றும் உபதேசித்தார்கள். இந்தயுக்தி தெய்வபக்தியுள்ள முன்காலத்திற்கு ஸரியாகவேவிருந்தது. ஈச்வரனை நிராகரிக்கும் இந்நாளில் பாபமென்றால் யார் நம்புவார்கள்? தெய்வபக்தி குறையக் குறைய அனுஷ்டானத்தில் ச்ரத்தையும் குறைந்து, அவைகளை ஏன் செய்யவேண்டும்? எதற்காக ஏற்பட்டன? என்று

விசாரிக்காமலே, செய்யாவிட்டால் பாபமென்று சொன்னதை மாத்திரம் கைப்பற்றி, பாபம், புண்ய மென்பது கண்ணுக்குத்தெரியாததால் அவைகளில் பயமில்லாமல் கர்மானுஷ்டானங்களை அடியோடு இவர்கள் விட்டுக்கொண்டு வருகிறார்கள். இவர்கள் ஸ்வதர்மத்தையும்விட்டு, பிறர் தர்மத்தில் புத்தியைச் செலுத்தி அதை அனுஷ்டிக்க ப்ரயத்னமும்செய்து இங்குமங்குங்கெட்டு வெகுவாய்க் கஷ்டப்படுகிறார்கள்.

முன்காலத்தில் தர்மஸூக்ஷ்மம் ஸகலஜனங்களுக்கும் தெரியும்பொருட்டு ஒவ்வொருஊரிலும் ஸர்வ சாஸ்த்ரார்த்தத்தையும் ஸுலபமாகத் தெரிவிக்கிற ஸ்ரீமத் ராமாயணம், ஸ்ரீமந் மகாபாரதம் முதலான புராணப்ரவசனங்கள் நடந்துவந்தன. இதனால் சிறுவர், சிறுமிகள் முதலான ஸகல ஜனங்களும் தர்மஸூக்ஷ்மத்தை யறிந்து ஆஸ்திகர்களாக விருந்தார்கள். தற்காலம் இந்த வழக்கம் அடியோடுநின்றுவிட்டது. இதனால் ஜனங்களுக்கு இது தர்மம், இது அதர்மமென்று தெரியாமலே இருந்துவருகிறது. தர்மாதர்மத்தின் ஸ்வரூபம் தெரியாவிட்டால் பாபத்தில் ஜனங்களுக்குப் பயம் எப்படி ஏற்படும்.

இம்மாதிரியான அனேக காரணங்களால் தற்காலத்தில் நமது ப்ராசீன ஸம்ப்ரதாயத்துக்கு ஸம்பவித்திருக்கும் துர்த்தசையையும், புதுநாகரிகத்திற்கு ஏற்பட்டிருக்கும் ஏற்றத்தையும், ஜனங்களுக்கு அவைகளில்உண்டாயிருக்கும் ஆவலையும், ஸ்ரீவைஷ்ணவனாகப்பிறந்தும் கால வைபரீத்யத்தாலும் புத்தி மோஹத்தாலும் செய்யக்கூடாததொழில்களை அவலம்பித்து ஜீவனம்பண்ணிவரும் ஸ்ரீவைஷ்ணவர்களையுங் கண்டு இப்படி நம் ஸமூஹமடைந்த கெட்டஸ்திதியைச்சீர்திருத்தி மறுபடி யதாஸ்திதிக்குக் கொண்டுவரவேண்டுமென்றுகருதி நம் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தஸபையானது சிலவர்ஷங்களாக யத்தனித்து தற்காலஸ்திதியின் ஸ்வரூபத்தையும் அதற்குச்செய்யவேண்டிய பரிஹாரங்களையுமறிந்த வித்வான்களைக்கொண்டு கிராமங்களில் இவ்விஷயமான தத்வத்தைப் போதிக்கும்படியான உபந்யாஸங்களைச்செய்வித்து, இப்பொழுது கேவலம் ப்ரமத்தால் நாசமடையும் ஜனங்களை மறுபடி பூர்வகாலத்திய சுத்தமான ஜீவனத்துக்குத் திருப்ப ப்ரயத்தனப்படவேண்டுமென்று யத்தனம்செய்து கொண்டுவருகிறது. இப்ரவிர்த்தியை நிறைவேற்றிவைக்க ஸ்ரீ. உப. ராவ் ஸாஹிப் ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி சென்ற இரண்டு வருஷங்களாய் வருஷம் ஒன்றுக்கு இருநூறுரூபாய்கள் கொடுத்து, இவ்வருஷமும் ஸபைக்கு எழுந்தருளி ரூபாய் இருநூறு கொடுத்திருப்பதையும் பதின்மூன்றாவது வார்ஷிக மஹாஸங்கத்தின் மூன்றாவது தினம் உபஸம்ஹாரத்திற்குமுன் அடியேன் விஜ்ஞாபனம் செய்துகொண்டது ஸபையை அலங்கரித்த எல்லோருக்கும் நன்றாய் ஞாபகமிருக்கலாம். இந்தஸ்வாமி தஞ்சாவூரில் பிறந்தவரானதால் ஜன்ம பூமிவாத்ஸல்யத்தினால் தன்த்ரவ்யத்தினாலுண்டாகும் ஸபை ப்ரவ்ருத்தியின் பலம், தான் பிறந்த ஜில்லாவிலேயே உண்டாகவேண்டுமென்று ஆசைப்படுவதால், தஸ்வாமியின் மனோரதத்தை அடுத்த மாசி, பங்குனிமாதங்களில் மேற்படி ஜில்லாவிலேயே நிறைவேற்ற முயற்சிசெய்யப்பட்டு வருகிறது. சென்ற 1921 ஹூ த்தில் வடுவூர், திருவாலூர், மடப்புறம், திருக்கண்ணமங்கை, வடயபுரம், திருக்கண்டியூர், ராஜமன்னார்கோவில் முதலிய இவ்வூர்களில் இந்த ஸ்வாமியினுடைய த்ரவ்யஸகாயத்தால் புத்தங்கோட்டகம் ஸ்ரீஉ. வித்வான் ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமியைக்கொண்டு உபந்யாஸங்கள் செய்விக்கப்பட்டன. தஞ்சாவூர் ஜில்லாவில் வெகு அக்ரஹாரங்கள் இருப்பதால் இந்த மஹானைப்போல இன்னும் அநேகமஹான்கள் முன்வந்து தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள எல்லாக்ராமங்களிலும் உபந்யாஸங்கள் நடத்தும்படி த்ரவ்யஸஹாயம் செய்தால் மிகவும் தேசோபகாரமாகஇருக்கும். இதுபோலவே இன்னும் மற்றஜில்லாக்களிலும் ப்ரபுக்கள்முன்வந்து உபந்யாஸங்களை நடத்த ஏற்பாடு செய்தால் தேசத்தில் ஆஸ்திக்யம் அதிகமாகி வைஷ்ணவஸமூகத்திற்கு ஒரு பலம் ஏற்படும்.



இந்தஸ்வாமி தம்முடைய பெயரை வெளிப்படுத்துவதில் கொஞ்சமேனும் இஷ்டமில்லாதவராக இருந்தும் அதை வெளிப்படுத்துவதே நமது தர்மமென்று எண்ணி நாம் அதை மேலே குறித்தோம்.

இந்தவிஷயமாக அவரிடத்தில் ஸபைக்குள்ள க்ருதஜ்ஞதையை நாம் இந்தப்பத்திரிகைமூலமாகத் தெரிவிக்கிறோம்.

R. ஸ்ரீநிவாஸராகவன்,
கார்யதர்சி.

ஸ்ரீ:

ஸ்ரீக்ருஷ்ணாய வாஸுதேவாய நம:

## ஸ்ரீ பாகவத தனிஶ்லோகீ.

(முன் தொடர்ச்சி.)

பிறகு வனவாஸம் முடிந்து நாட்டுக்கெழுந்தருளினவாறே அந்த அஹங்கார மமகாரங்கள் நிவ்ருத்தி அடைந்து அடியேனைக்கொண்டு திருவபிஷேக மஹோத்ஸவத்தைக் கண்டருளி, அடியேனை க்ருதார்த்தனாக்கவேண்டும் என்கிற பக்தி விசேஷத்துடன் மறுபடியும் நாள் வைக்க, அன்று அதை அங்கீகரித்தருளினான் என்னும் அர்த்தத்தை வால்மீகி மஹர்ஷியும் ‘தத: ஸுப்ரயத:’ என்றானிறே. முன்பு அப்படி எண்ணி இருந்தவர் இப்பொழுது கீழ்ச்சொன்ன பரிசுத்தியை அடைந்தார் என்றபடி. இந்தச்சுத்திதான்,

'விள்கை விள்ளாமை விரும்பி' என்று அருளிச்செய்யப்பட்டுள்ளது. விள்கையாவது ப்ரயோஜநாந்தரங்களைப்பெற்று அகன்றுபோகை. விள்ளாமையாவது 'நிருபாக்ஷ:' என்று சொல்லப்பட்டிருக்கிறபடியே உபாய தசையிலும் பல தசையிலும் பகவானைவிட்டு அகலாமை. இவைகளை யோசித்துப்பார்த்து, உள் கலந்தார்க்கு - பரிசுத்தமான மனதுடன் தன்னை ஆச்ரயித்தவர்களுக்கு, அதாவது அநந்யப்ரயோஜனர்களான பரமைகாந்திகளுக்கு அவன் மிகவும் போக்யன் என்றபடி.

'தபோ தக்ஷ:' என்றாரம்பித்து,

'தாநேஷு ஸர்வேஷு ஹதா நிக்ஷ:'

என்று தபஸ்ஸு முதலிய ஸத்கர்மங்களே அபிப்ராயத்தில் அசுத்தி உடையவைகளாய் இருந்தால் அவைகளும் நிஸ்ஸாரங்களாகுமென்று சொல்லப்பட்டதிறே.

'தச' என்று கீழ்ப்ரஸ்துதமான பக்தியினால் ஸமர்ப்பிக்கப்பட்டதைச் சொல்லியிருக்க 'ஹக்த்யு வஹ்ருதம்' என்று மறுபடியும் அதைச் சொல்லியிருப்பது, பகவான் ஆதரிப்பதற்கு இவனுடைய பக்தி ஒன்றே காரணம், மற்று வேறொன்றும் இல்லை என்று தெரிவிப்பதற்காக.

'பத்துடையடியவர்க் கெளியவன்'

என்பதை இங்கு ப்ரகாசித்தருளினபடி.

இதில் 'சுஹம்' என்பது அல்பமான இலை முதலிய வஸ்துக்களை அங்கீகரிப்பதற்கு விருத்தமான ஸ்வபாவங்களைத் தெரிவிக்கிறபடியினால் பரத்வத்தைக் காட்டுகிறது. இங்கு 'சுஹம்' என்பதற்கு ஸர்வேச்வரனாகிய நான் என்றர்த்தம். இந்திரன் முதலிய தேவதைகள், யாகங்களில் கொடுக்கப்படும் ஹவிஸ்ஸைப் புஜித்து அத்தால் சக்தியை அடையக்கூடியவர்கள். எனக்கோ அப்படியல்ல.

'பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாந பலக்ரியா ச' என்று எல்லா வஸ்துக்களையும் நியமிக்கக்கூடிய சக்தி அவனுக்கு ஸ்வபாவ ஸித்தமாதலால் ஆஹாரம் முதலியவைகளினால் வ்ருத்தி செய்யப்பட வேண்டியதில்லை. ஆதலால் சக்தி உண்டாவதற்காக எனக்கு அவைகள் அபேக்ஷிதங்களல்ல. எல்லா உலகங்களையும் படைத்துக்காத்து அழிப்பதை லீலையாக உடையவன் ஆதலால், என்னாலே ஸ்ருஷ்டித்து ரக்ஷிக்கப்படாத வஸ்துவல்லவே நீ ஸமர்ப்பிப்பது. அவாப்த ஸமஸ்த காமன். எல்லா இஷ்டங்களையும் அடைந்தவன். 'நாநவாப்தம் அவாப்தவ்யம்' என்று சொல்லுகிறபடியே



இதுவரையில் அடையப்படாததாய் இனி அடையவேண்டியதாகிய இஷ்டமான வஸ்து எனக்கு இல்லை. ஸத்யஸங்கல்பன், எனக்கு வேண்டுமென்கிற ஸங்கல்பம் இருந்தேயானால் கிடைக்காததொன்றுமில்லையாகையினால் நீ ஸமர்ப்பிக்கவேண்டியது ஒன்றுமில்லை என்றபடி. மிகவும் ஆநந்தமயமான ஸ்வரூபம் குணங்கள் இவை முதலியவைகளை உடையவன். அதினால் அவைகளை அநுபவிப்பதினாலேயே த்ருப்தி அடைந்திருக்கும் எனக்கு நீ ஸமர்ப்பிப்பதினால் த்ருப்தி உண்டாகவேண்டியதில்லை. இவ்வளவுமேன்மையை உடையவனாயிருந்தபோதிலும் என்று தாத்பர்யம்.

'அச்நாமி' என்பதற்குச் சாப்பிடுகிறேன் அதாவது அநுபவிக்கிறேன் என்று தாத்பர்யம். அதாவது எனக்கும் கிடைக்க அரிதானவஸ்து கிடைத்தாற்போலே அநுபவிக்கிறேன் என்றபடி.

1. 'பரிபூர்ணோऽபி ஹகவாந் ஹக்தைர் த்த்தம் விசேஷத:।
ஸாபேக்ஷவத்தத்ர ததஸ்ப்ரீதோ தத்தே ததாத்ருசம் ॥'

(பகவான் பரிபூர்ணனாக இருந்தபோதிலும் பக்தர்களினால் ஸமர்ப்பிக்கப்பட்ட, ஏதாவது ஒரு வஸ்துவை அதில் மிகவும் அபேக்ஷை உடையவன்போல அங்கீகரிக்கிறான். அதினால் ப்ரீதி அடைந்து விசேஷமான பலத்தைக்கொடுக்கிறான்) என்று சொல்லப்பட்டிருப்பது இங்கு அநுஸந்தேயம். மேலும் சாப்பிடுகிறேன் என்றது எல்லாவிதத்திலும் உபயோகித்துக் கொள்ளுகிறேன் என்றபடி.

2. பரீக்ஷியா ஹ்ஸம்ப்ருப்தா ஹ்யேகாந்திகஜனை: ।
தஸ்யைவாநா: சிரஸாதேவ: ஸ்வயம் க்ருஹ்ணாதி கேசவ: ॥'

3. ஆஜ்யத்ரமணே ஹவிர் விஹிதாவி யஸ்யா ஆவர்ஜநீ ஜாவமக்நி ஸூஷ்ர்த்தா ஹெஸம்வ ஸகாம்யாணம் மணூஷிதம்:
ஆஜ்ஞாஹ்தவாயிணே யஸ்ய விதாநவ்யுயநாவரிதா ।
யா வனகாலி ஸூய்யா தேஷானிவ ஸூயஸிரஸா ஸூக்கிருணா விதாம் ॥'

ப்ரும்மாவினால் ஸமர்ப்பிக்கப்பட்ட ஆராதனங்கள் பகவானுடைய திருவடிகளில் போய்ச் சேருகின்றன; பரமைகாந்திகளால் செய்யப்பட்ட ஆராதனங்களையோ பகவான் தலையினாலே அங்கீகரிக்கிறார்) என்கிறபடியே மிகுந்த ஆதரத்துடன் அங்கீகரிக்கிறேன் என்றபடி.

இவ்விடத்தில் பெருமாளுக்கு அமுது செய்விக்க வேறு வஸ்துக்கள் கிடைக்காதபோது இலையையும் அமுது செய்யப்பண்ணலாம் என்றும் தாத்பர்யம் ஏற்படுகிறது.

ஆக இத்தால் ஸர்வேச்வரனாயிருந்தபோதிலும் தாம் பக்தர்களிடத்தில் மிகுந்த அநுக்ரஹத்தைச் செய்து அவர்களுக்கு ஸுலபமாய்க்கிடைக்கக் கூடிய ஏதாவது ஒரு த்ரவ்யத்தினால் ஆராதிக்கப்பட்டு அவர்களுக்கு விசேஷமான பலத்தைக் கொடுத்தருளுவதாகிய தம்முடைய ஸ்வபாவத்தைத் தாமே வெளியிட்டருளினாராயிற்று. இந்த ச்லோகமே பகவத்கீதையி லொன்ப தாவது அத்யாயத்தில் இருபத்தாறுவது ச்லோகமாகையினால் அவ்விடத்தில் ஸ்ரீகீதா பாஷ்ய ஸ்ரீமத் தாத்பர்ய சந்திரிகைகளில் நிரூபிக்கப்பட்டிருக்கும் இதன் விசேஷார்த்தங்கள் அறியத்தக்கவை.

---

1, பாரதம் - சாந்தி - மோக்ஷ - 353—4.

இன்னும்வரும். சே நரஸிம்மாசார்யர்.

ஸ்ரீ:

# நீதி ச்லோகங்கள்.

(நெடுந்தெரு, ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸாசார்யர்.)

நாயெ ஸ்ரீ வ-ஸ-ஷொத்த ஒ8 த்ரி ஜமதாஒகோயிவெ வெ கலோ
வெஸெவ்ய ஷஸ்ய வஷஸ்ய ஊதஸிஸ-ரெ நாராயணெ திஷ்டதி ।
யஂகஂஷி த்வ-ர-ஷாய8ஂ கதிவயமாஒஸ 8ஷாய-ஷஂ
ஸெவாஒயெ 8ூமயா 8ஹெ நர8ஹொ உ-ஸாவரா காவயழ ॥

இதன் அர்த்தம்,

(ஸர்வஸ்வாமியும் புருஷச்ரேஷ்டனும் மூன்றுலோகங்களுக்கும் அதிபனும் மனதினால் தியானிக்கத்தக்கவனும் தன் பதத்தை யளிப்பவனும் தேவனுமான நாராயணனான பகவான் இருக்கையில், புருஷாதமனும் சில க்ராமங்களுக்குமாத்திர மீசனும் அல்ப பலத்தைத் தருபவனுமான யாதாமொரு மனிதனை நாம் ஸேவிக்கத் தேடித்திரிகிறோமே.) ஐயோ! நாம் என்ன முட்டாள்களாயும் அல்பர்களாயு மிருக்கிறோம்.



ஸ்ரீமந்நாராயணனே ஸர்வஜகத்துக்கும் காரணனும் ஸர்வதேவர்களிலும் ச்ரேஷ்டனும் ஸர்வகர்மங்களாலும் ஆராதிக்கப்பட்டு ஸர்வபலங்களையும் கொடுப்பவனும் ஸர்வ ஸுலபனுமாயிருக்கிறான். (1) நாமெந்தத்தேவதைகளை ஆராதித்தாலும் எல்லாம் அவனையே சேர்ந்து அவனிடமிருந்தே அந்தந்தப்பலன்களும் உண்டாகின்றன.

ஆனால் இதைத் தெரிந்துகொண்டு அநுஷ்டிப்பவர்களுக்குப் பலன் பூர்ணமாயும் மற்றவர்களுக்குக் குறைவாயும் கிடைக்கின்றது. ஆகலால் அவனை விடாமுயற்சியுடன் ஆராதித்து அவனருளைப்பெறில் நமக்குக் கிடைக்காத தொன்றுமில்லை.

அம்பரீஷ மஹாராஜன் பகவானைக்குறித்துத் தவஞ்செய்து கொண்டிருக்கையில் அவனைப் பரீக்ஷிக்கப் பகவான் தேவேந்திரன் வேஷம்பூண்டுவந்து அவரைப்பார்த்து 'ஏன் தவஞ் செய்கிறீர்? என்னவரம் உமக்கு வேண்டு' மென்று கேட்டதற்கு அம்பரீஷர் 'நான் பகவானைக்குறித்துத் தவஞ்செய்கிறேன்; உம்மாலாகவேண்டிய தொன்றுமில்லை, உம்மிடம் வரங்களை விரும்புபவர்களுக்குக் கொடும். உமக்கு நமஸ்காரம் போய்வரலாமென்றார், அதற்கு இந்திரன் 'நான் மூன்றுலோகத்துக்கும் நாயகன். எல்லாத்தேவர்களும் முனிவர்களும் எனது ஆஜ்ஞைப்படி நடக்கிறார்கள். எனது பெருமையை யறியாமல் பேசுகிறீர்' என்றான். அம்பரீஷரும், 'உம்முடைய பெருமையை யானறிவேன், ஆனால் இந்தப்பெருமையும் இதற்கு மகாபலிசக்ரவர்த்தி முதலியோர்களால் தடங்கல் நேர்ந்தபோது பரிஹாரங்களும், இன்னும் உனக்குமேற்பட்ட பிரும்மாதிகளின் ஐச்வர்யங்களும் யாரிடமிருந்து கிடைத்திருக்கின்றனவோ அவனைத் தான் நான் ஆராதித்து வருகிறேன்' என்றதும் இந்திரன் கோபத்துடன் தவத்தை நிறுத்திவிட்டு வரனைக்கேளும் இல்லாவிடில் இந்த வஜ்ராயுதத்தால் ப்ரஹரிப்பேன் என்றான். அம்பரீஷரும் அஞ்சாமல் 'நான் உனக்கும் மற்றவருக்கும் ஒரு தீங்கும் செய்கிறதில்லை. (2) பகவானிடத்தில் பக்திசெய்வோருக்குத் தேவதைகள் விக்னம் செய்வார்களெனச் சொல்லப்படுகிறது. ஆனாலுமிவர்களிடமது பலிக்

---

1. யெகவ்யநூ தெவதா ஹக்தா யஜஜெ ஶ்ரத்தயாந்விதாஃ । தெவி 8ாஒ8வ கௌஜெய யஜந்த்யவிதி வ-ஸ-வ-கஷ ॥ ஸஹஷெதவ தஃ காரோ-நூஒயெவ விஷீதநிதாநு ॥ ஸ்ரீகீதை. க. ௯. ஸ்லோ 23.

2. ஸ்ரு-ஹெயதெகிஷ ஹொவிஂஷெ ஹக்தி 8-ஷஷதாஂ நூணாழ ।
ஸஂஸார நூ-ஷதாஹீதா ஷூஹஶாஃ வரிவந்தநஃ ॥

காது (3) உன்வஜ்ராயுதத்தால் என்னை அடித்தாலும்சரி, இல்லாவிடினும்சரி, நான் ஒருபோதும் கோவிந்தனைவிட்டு மற்றவனை ஆராதிக்கமாட்டேன்’ என்று சொல்லிவிட்டார். உடனே பகவானும் அவர் த்ருடநெஞ்சத்தைக்கண்டு மகிழ்ந்து நிஜரூபத்துடன் ப்ரஸன்னராகி உயர்ந்த பலன்களைக் கொடுத்தார். இப்படி த்ரிலோகாதிபதியான இந்திரன் முதலியோர் வலுவில்வந்து வேண்டியவரைக் கொடுப்பதாய் நிர்ப்பந்தித்தும் அம்பரீஷர் முதலியோர் கண்ணெடுத்துப்பாராமல் நிராகரித்துவிட்டார்கள். ப்ரபன்னர்களான நாம்மாத்திரம் தேஹாவஸானத்தில் மோக்ஷம் நிச்சயமென நினைத்துகொண்டு பணத்துக்காக ப்ரபுக்களையனுசரிப்பதும் அவர்களின் ப்ரீதிக்காகவேண்டி (4) குரங்காட்டி குரங்கைக்காட்டிக் காட்டிப் பிச்சை வாங்குவதுபோல் நமதுவார்த்தைகளை அவர்களிடத்தில் ப்ரயோகிப்பதும், அவர்கள் கொடுக்குமல்ப்பலன்களைக்கண்டு சந்தோஷிப்பதும், ஸர்வேச்வரனைப்பற்றிய நினைவுகூட இல்லாமலிருப்பதும் ஸஹஜமாயிருக்கிறது. (5) பணக்காரனைப் ப்ரீதியுடன் பண்ணும் ஸ்தோத்திரத்தைப் பகவத் விஷயத்தில் செய்தால் யார்தான் ஸம்ஸாரத்திலிருந்து விடுபடமாட்டார்கள் என்றார்ஒருவர். (6) ஸ்ரீதேசிகனும் கெட்டப்ரபுவின் வீட்டுவாசலில் கஷ்டத்துடன் நிற்பதற்கு ஒரு அஞ்சலி’ என்றும், ‘வாசற்காப்பவனென்னும் பாம்புகளாகிற பெருந்தடையுள்ள துஷ்டப்ரபுகளின் வீடுகளாகிற பிலத்துவாரத்தில் புகுவதால்பரிதபிக்கிறேன், ஆதலால் பாதுகையே! அழியாப்பொருளான பெருமானை மேலாக உடைய உன்னிடத்திலேயே என்மனத்தை இருக்கச்செய்ய வேணு’மென்று ப்ரார்த்தித்தார். ஆகையால் பகவானை நம்பியிருந்தால் எல்லா ஸித்தியையும் அடையலாம்.

---

3. [illegible]

4. [illegible]

5. [illegible]

6. [illegible]

ஸ்ரீ:

# உபய வேதாந்தம்.

(ஸ்ரீ. உ. வே. காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமி.)

உபய ஸம்ப்ரதாயஸ்தர்களான ஸ்ரீ வைஷ்ணவர்கள் உபய வேதாந்தப்ரவர்த்தகர்களென்றும், உபய வேதாந்தாசார்யர்களென்றும் வ்யவஹரிக்கப்படுகிறார்கள். உபயவேதாந்தங்களாவன:—ஸம்ஸ்க்ருத த்ராவிட வேதாந்தங்கள். ஸம்ஸ்க்ருதவேதாந்தம் ப்ரும்மஸ்வரூபம், ரூபங்கள், குணவிபூதிகள், ப்ரும்மப்ராப்தி அதனுடைய பலம் ஆகிய இவைகளை நேராக ப்ரதிபாதிக்கிற உபநிஷத்பாகங்கள். த்ராவிட வேதாந்தம் ஆழ்வார்களில் ப்ரதானராயும் ப்ரபந்நஜன கூடஸ்தராயுமுள்ள நம்மாழ்வார் அருளிச்செய்த திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி இந்த நாலு ப்ரபந்தங்கள். ஸம்ஸ்க்ருத வேதாந்தத்திற்கு அங்கோபாங்கங்கள் சிக்ஷை முதலானவைகள் - த்ராவிட வேதாந்தத்திற்கு அங்கோபாங்கங்கள் மற்ற ஆழ்வார்களுடைய ப்ரபந்தங்கள்.

வேதாந்தமாவது தன்னுடைய ப்ராமாண்யத்தில் வேறொன்றை அபேக்ஷியாமலும் அபௌருஷேயமாயும், அதனாலேயே புருஷபுத்தி அதீநங்களான ப்ரமை, ஏமாற்றுதல், அஜாக்ரதை முதலிய தோஷங்களில்லாததாயும், பூர்வகல்பத்தில் எவ்வித ஒழுங்கோடு கூடியிருந்ததோ அப்படியே உத்தரோத்தரங்களிலும் தொடர்ந்து வருவதாயும், ஸ்ருஷ்டி காலத்தில் “யோப்ரஹ்மாணம்” என்கிற ச்ருதியின்படி ஸர்வேச்வரனாலே உபதேசிக்கப்பட்ட வேதமாகிற அக்ஷரராசி. அப்படியே த்ராவிட வேதாந்தமும் “என் முன் சொல்லும் மூவுருவா முதல்வனே, திருநாமச்சொல் கற்றனமே” என்று சொல்லுகிறபடியே ஸர்வேச்வரன் ஆழ்வாருக்கு உபதேசிக்க, பிறகு மதுரகவி ப்ரப்ருதிகளால் விஸ்தரிக்கப்பட்ட கீழ்ச்சொல்லிய நான்கு ப்ரபந்தங்கள். இப்படி ஸம்ஸ்க்ருத வேதாந்தத்திற்குப்போல் இதனுடைய நித்யமும் அபௌருஷேயத்வமும் புராணங்களாலும் பூர்வாசார்யர்களாலும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. அந்த ப்ரமாணங்கள் மேலே குறிக்கப்படும். அன்றிக்கே, ஆழ்வாரே வக்தாவாக இருந்தாலும் வேதத்திற்கு அபௌருஷேயமென்பதால் வேறொன்றை அபேக்ஷியாத ப்ரமாணமாவது போலவும், ஸர்வேச்வரனால் அருளிச்செய்யப்பட்ட பாஞ்சராத்ரத்திற்கு ஸர்வேச்வரன் சொன்னான் என்பதால் வந்த ப்ராமாண்யம் போலவும், “மயர்வறமதிநலம் அருளினன்” என்கிறபடியே பகவத் கடாக்ஷ விசேஷத்தினாலே தத்வங்களின் உண்மையை ஸாக்ஷாத்கரித்த ஆழ்வார் வக்தாவாக ஏற்பட்டிருப்பதால் கீழ்ச்சொன்ன ப்ரா

மாண்யம் ஏற்படுகிறபடியால் வேதமென்று வ்யவஹரிக்கலாம் என்று சில ஆசார்யர்களுடைய அபிப்ராயம். அல்லது ஸர்வேச்வரனுடைய (பரத்வாதி ஐந்துப்ரகாரங்களில்) பரத்வத்தைச்சொல்லுகிற வேதம், அந்த ஸர்வேச்வரனுடைய வ்யூஹாவஸ்தையை ப்ரதிபாதிக்கிற பாஞ்சராத்ரமாக ஆனாற்போலவும், அப்படியே விபவதசையில் 'வேதவேத்யே' என்கிற ச்லோகத்தின்படி ஸ்ரீ ராமாயணமாக ஆனாற்போலவும், அந்தர்யாமித்வாவஸ்தையில் மனுஸ்ம்ருதியாக ஆனாற்போலவும், அர்ச்சாவஸ்தையில் அதை ப்ரதிபாதிக்கின்ற ப்ரபந்தங்களாக ஆயிற்று என்றும் சிலரபிப்ராயம். ஆக இப்படிப்பட்ட உபபத்திகளினாலே த்ராவிட வேதாந்தமென்று ப்ரபந்தங்களை வ்யவஹரிப்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. (1) ப்ராம்மணர்கள் ஸம்ஸ்க்ருத வேதத்தைப்போல் தமிழ் வேதத்தையும் ஓதவேண்டும் என்று புராணங்களாலும், ஆசார்யர்களில் கூரத்தாழ்வான், (2) ஆயிரம் சாகைகளை உடைய த்ராவிட வேத ஸம்ஹிதையை ஸாக்ஷாத்கரித்தவர் என்றும், பட்டர் (3) ஸம்ஸ்க்ருத த்ராவிட வேதங்களுக்குப் பொருள் என்றும், ஸ்ரீ தேசிகன் (4) "வேதங்களின் மற்றொரு ரூபமான ஸம்ஹிதையை ஸாக்ஷாத்கரித்தவரை" என்று பாதுகா ஸஹஸ்ரத்திலும், (5) த்ராவிட வேதத்தை ஸாக்ஷாத்காரம் செய்தவர், "எல்லா ப்ராணிகளுடையவும் நன்மையின் பொருட்டு அகஸ்த்ய பாஷையின் ரூபத்தால் வேதங்களை உத்தாரம் செய்தவர் - ஸத்ஸம்ப்ரதாய க்ரமத்தில் கிடைத்ததும், எல்லா ஜாதிக்கும் உரியதுமான த்ராவிட வேதத்தில் ச்ரத்தையினால் பரிசுத்தமாக்கப்பட்ட மனதை உடைவர்களுக்குக் கோதற்ற குதூஹலத்தைக் கொடுக்கக்கூடிய இந்த க்ரந்தத்தை ஸ்ரீவேங்கடேசர் செய்தார்" என்று த்ரவிடோபநிஷத் தாத்பர்ய ரத்னாவளியிலும், 'தமிழ்வேதமறிந்த பகவர்களே' என்று த்ராவிட ப்ரபந்தத்திலும் அருளிச் செய்கையாலும் வேதமென்பது ஸுஸ்பஷ்டம்.

---

1. अध्येतव्या द्विजवरैः द्राविडी ब्रह्मसंहिता । संस्कृत श्रुतिवत् [illegible] द्राविड श्रुति[illegible]या ॥

2. सहस्रशाखां योऽद्राक्षीत् द्राविडीं ब्रह्मसंहिताम् ॥ [illegible] संस्कृत द्राविड वेदसूक्तैः 4. [illegible] प्रकृतिं अपरां संहितां दृष्टवन्तम् । 5 द्राविड ब्रह्मदर्शी । वेदा[illegible] सर्वेषां उदयाय श्रेयसे प्राणिनामयः । [illegible] सम्प्रदाय क्रम[illegible] [illegible] वेद श्रद्धा [illegible] [illegible] कौतूहलं वेङ्कटेशः ॥

186735